"ஐவகையடியும்" - என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம்

வித்துவான் திரு. அடிகளாசிரியர்

தமிழ்த்துறை, சென்னைப்பல்கலைக்கழகம்.

முகவுரை - இளம்பூரணர் கருத்து - பேராசிரியர் கருத்து - நச்சினார்க்கினியர் கருத்து - யாப்பருங்கல விருத்தியாசிரியர் கருத்து- என் கருத்து - என்கருத்து என்பவையே நன்கு கருதத்தக்கன; மற்றவை; அவற்றிற்குத் துணை.

பட்டியல்

1. இருபத்தைந்து விகற்பம் - 2. நூற்றிருபத்தைந்து விகற்பம் - 3. அறுநூற்றிருபத்தைந்தடி - 4. குறளடியில் நான்கெழுத்தடி - 5. குறளடியில் ஐந்தெழுத்தடி - 6. குறளடியில் ஆறெழுத்தபடி - 7. சிந்தடியில் ஏழெழுத்தடி - 8. சிந்தடியில் எட்டெழுத்தடி - 9. சிந்தடியில் ஒன்பதெழுத்தடி - 10. அளவடியில் பத்தெழுத்தடி - 11. அளவடியில் பதினோரெழுத்தடி - 12. அளவடியில் பன்னிரண்டெழுத்தடி - 13. அளவடியில் பதின்மூன்றெழுத்தடி - 14. அளவடியில் பதினான்கெழுத்தடி - 15. நெடிலடியில் பதினைந்தெழுத்தடி 16. நெடிலடியில் பதினாறெழுத்தடி - 17. நெடிலடியில் பதினேழெழுத்தடி - 18. கழிநெடிலடியில் பதினெட்டெழுத்தடி - 19. கழிநெடிலடியில் பத்தொன்பதெழுத்தடி - 20. கழிநெடிலடியில் இருபதெழுத்தடி.

ஐவகை யடியும் விரிக்குங் காலை
மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்தும்
எழுபது வகையின் வழுவில வாகி
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே.

(தொல்காப்பியம் செய்யுளியல் 48)

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழாய்வுக்கு நன்றி.

முகவுரை

மேற்கண்ட இந்நூற்பாவிற்குத் தெளிவுரை கூறும்முன் அத் தெளிவுரைக்கு வேண்டிய முகவுரையை முன்னே தருகின்றேன்.

தொல்காப்பியர் செய்யுளியல் முதற் சூத்திரத்தே செய்யுள் உறுப்புக்களையெல்லாம் தொகுத்தோதியுள்ளார். அவ்வுறுப்புக் களுள் ஒன்று அடியாகும். அவ்வடியென்னும் உறுப்பினை அவர் கூறத் தொடங்கும்பொழுது,

"நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே"

என்று நூற்பாவினை ஓதித் தொடங்குகின்றார். இந்நூற்பா விற்குப் பேராசிரியர் அடியென்று சிறப்பித்துச் சொல்லப் படுவன நாற்சீரடி என்றவாறு. எனவே, இருசீரானும் முச்சீரானும் ஐஞ்சீரானும் அறுசீர் முதலியவற்றானும் அடிகள் வருமாயினும் அவைசிறப்பில என்றவாறாம் என்றனர்.

இளம்பூரணர் கட்டுரைவகையான் (தொல். செய். 119)

என்னும் நூற்பாவில், முற்றடி யின்றிக் குறைவுசீர்த் தாகியும் என்னும் அடிக்கு நாற்சீரடியின்றி முச்சீரடியானும் இருசீரடியானும் வருதல் என்று உரை கூறியுள்ளார். அதனால் நாற்சீரடியே முற்றடியென்று பெயர் பெறும் என்பதாயிற்று.

அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே (தொல்.செய்.35)

என்ற நூற்பாவுரையுள் பேராசிரியர், இது நாற்சீரடியையே விசேடித்துக் கூறி, அதனது இடத்தானே பாட்டென்பதோர் முதற் பொருள் தோன்றுமென்ப துணர்த்தியவாறு. இதனுள் எனப்படும் என்றதனால் இவ்வடிகளான் (அளவடிகளால்) வந்த செய்யுளே சிறப்புடையன வென்பதும் சொல்லியவாறு என்றனர். மேற்கூறிய இவற்றால் நாற்சீரடியாகிய அளவடி எல்லா அடிகளிலும் சிறந்த தென்பது போந்ததாம்.

தொல்காப்பியர் அந்நாற்சீரடியினையே எழுத்தளவு பற்றிக் குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்து வகையாகப் பகுத்தோதினார். நாலெழுத்தடி, ஐந்தெழுத்தடி,

ஆறெழுத்தடி, என்று மூன்று நிலம் பெறும் குறளடி யென்றும், ஏழெழுத்தடி, எட்டெழுத்தடி, ஒன்பதெழுத்தடி என்று மூன்று நிலம் பெறும் சிந்தடியென்றும், பத்தெழுத்தடி, பதினோரெழுத்தடி பன்னிரண்டெழுத்தடி பதின்மூன்றெழுத்தடி பதினான் கெழுத்தடி என்று ஐந்து நிலம் பெறும் அளவடி யென்றும், பதினைந்தெழுத்தடி பதினாறெழுத்தடி பதினேழெழுத்தடி என்று மூன்று நிலம் பெறும் நெடிலடியென்றும், பதினெட்டெழுத்தடி பத்தொன்பதெழுத்தடி இருபதெழுத்தடி என மூன்று நிலம் பெறும் கழிநெடிலடி யென்றும் அவர் கூறியுள்ளார்.

எனவே, சிறந்த அடியென்று கூறப்படும் அவ்வளவடி தானே எழுத்துவகையால் குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐவகையாய்ப் பதினேழ் நிலம் பெற்று வரும் என்பதாயிற்று.

மேற்கண்ட நூற்பாவில் ஐவகையடி, பதினேழ் நிலம் என்னும் இரண்டைப்பற்றி யார்க்கும் கருத்து வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. எழுபது வகையின் வழுவிலவாகி என்பது பற்றியும் அறுநூற்றிருபத்தைந்தடி எப்படி ஆயின என்பது பற்றியும் உரையாசிரியர்களுள் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

இளம்பூரணர் கருத்து

முன்னர் இளம்பூரணர் கூறுவதைப் பார்ப்போம். அவர் இயற்சீர் 10, ஆசிரியவுரிச்சீர் 6, வெண்பாவுரிச்சீர் 4, வஞ்சியுரிச்சீர் 60, அசைச்சீர் 4 என்னும் எண்பத்து நான்கு சீரால் எழுபது வகைப்பட்ட உறழ்ச்சி உண்டாயின என்பர். அவ்வெழுபது வகைப்பட்ட உறழ்ச்சியினையே தொல்காப்பியர் எழுபது வகையின் வழுவில வாகி என்று கூறியுள்ளார் என்று இளம்பூரணர் கருதுகிறார்.

எண்பத்து நான்கு சீரால் எழுபது வகை உறழ்ச்சி

இளம்பூரணர், அடிகள் ஏழாக வரும் என்று முதற்கண் வகுத்துக் கொள்ளுகிறார். இயற்சீரான் வருவது (ஒன்றி வருவது

போலும்) இயற்சீரடி; ஆசிரியவுரிச்சீரான் (ஒன்றியும் ஒன்றாதும் வருவது போலும்) வருவது ஆசிரிய வுரிச்சீரடி; இயற்சீர் விகற்பித்து வருவது இயற்சீர் வெள்ளடி, வெண் சீரான் (ஒன்றியும் ஒன்றாதும் வருவன போலும்) வருவது வெண்சீரடி. நிரையீற்று வஞ்சிச்சீரான் வருவது நிரையீற்று வஞ்சியடி; உரியசையீற்று வஞ்சிச் சீரான் வருவது உரியசையீற்று வஞ்சியடி; ஓரசைச் சீரான் வருவது அசைச்சீரடி; என்று ஏழுவகையாக அமைத்துக் கொள்கின்றார். இவ்வேழு வகையும் எழுபது வகை உறழ்ச்சியால் வரும் என்பது அவர் கருத்தாம்.[1]

ஏழடியுள் வரும் உறழ்ச்சி எழுபது

இயற்சீர் ஒன்றிய உறழ்ச்சி 10

இயற்சீர் நேரீறு, நிரையீறு என இருவகைப்படும். அவற்றுள் நேரீறு நின்று நேர் முதலாகிய இயற்சீருடனும், நேர்பு முதலாகிய ஆசிரியவுரிச்சீருடனும், நேர் முதலாகிய வெண்பாவுரிச்சீருடனும், நேர் முதலாகிய வஞ்சியுரிச் சீருடனும், நேர்முதல் ஓரசைச் சீருடனும் ஒன்றினால் ஐந்தும்;

நிரையீறு நின்று நிரை முதலாகிய இயற்சீருடனும், நிரைபு முதலாகிய ஆசிரிய வுரிச்சீருடனும் நிரை முதலாகிய வெண்பாவுரிச்சீருடனும், நிரை முதலாகிய வஞ்சியுரிச் சீருடனும், நிரைமுதல் ஓரசைச் சீருடனும் ஒன்றினால் ஐந்தும் ஆகப் பத்துவகை உறழ்ச்சி கிடைக்கின்றன.

ஆசிரியவுரிச்சீர் உறழ்ச்சி 10

ஆசிரியவுரிச்சீரும் நேர்பு நிரைபு என இருவகைப்படும். இவ்விரண்டும் மேற்கூறியவாறு உறழப் பத்துவகை உறழ்ச்சியாகும்.

---

1. வஞ்சியுரிச்சீர் அறுபதுள் நேரீறு 12, நிரையீறு 16, உரியசையீறு 32 சீராகும் இளம்பூரணர் நேரீற்று வஞ்சிச்சீரான் வரும் அடியை ஏன் கொள்ளாது விட்டார்? என்பதற்கு அவர் கூற்றால் காரணம் புலப்படவில்லை.

இயற்சீர் விகற்ப உறழ்ச்சி 10

இயற்சீர் வெள்ளடியும் நேரீறு நிரையீறு என்றும் இரண்டாற்றோன்றி இருவகைப்படும். அவற்றுள், நேரீற்றியற் சீர் வெள்ளடி நேரீற்றியற் சீருடன் ஒன்றாமல் நிரை, நிரைபு, முதலியசீர் வருதலும், நிரை முதலாசிரியவுரிச்சீர் வருதலும், நிரைமுதல் வெண்பாவுரிச்சீர் வருதலும், நிரை முதல் நிரைபு முதல் வஞ்சியுரிச்சீர் வருதலும், நிரை நிரைபு என்னும் ஓரசைச்சீர் வருதலும் என ஐந்து வகைப்படும்.

நிரையீற்றியற்சீரினால் தோன்றும் வெள்ளடி நிரையீற்றியற் சீருடன் ஒன்றாமல் நேர்முதல் நேர்பு முதல் இயற்சீர் வருதலும், நேர்பு முதலாகிய ஆசிரிய வுரிச்சீர் வருதலும், நேர்முதல் வெண்பாவுரிச்சீர் வருதலும் நேர்முதல் நேர்பு முதல் வஞ்சியுரிச்சீர் வருதலும் நேர் நேர்பு என்னும் ஓரசைசீர் வருதலுமென ஐந்து வகைப்படும்.

வெண்சீர் உறழ்ச்சி 10

வெண்சீர் நேர் முதலோடு உறழ்தலும் நிரை முதலோடு உறழ் தலுமென இருவகைப்படும்.

வெண்சீர் ஈற்றுமுன் நேர் முதல் வெண்பாவுரிச்சீர் வருதலும், நேர்முதல் நேர்பு முதல் இயற்சீர் வருதலும், நேர்பு முதல் ஆசிரிய வுரிச்சீர் வருதலும், நேர் முதல் நேர்பு முதல் வஞ்சியுரிச்சீர் வருதலும் நேர் அல்லது நேர்பு என்னும் ஓரசைச்சீர் வருதலும் என ஐந்து வகைப்படும்.

வெண்சீர் ஈற்றுமுன் நிரைமுதல் வெண்பாவுரிச்சீர் வருதலும், நிரைமுதல் நிரைபு முதல் இயற்சீர் வருதலும், நிரைபு முதலாசிரியவுரிச்சீர் வருதலும், நிரை முதல் நிரைபு முதல் வஞ்சியுரிச்சீர் வருதலும், நிரை அல்லது நிரைபு என்னும் ஓரசைச்சீர் வருதலுமென ஐந்து வகைப்படும்.

நிரையீற்று வஞ்சியுரிச்சீர் உறழ்ச்சி 10

நிரையீற்றுவஞ்சியுரிச்சீர் வருஞ்சீர் முதலசையோ டொன்றுவனவும் ஒன்றாதனவுமென இருவகைப்படும். அவற்றுள் ஒன்றி வருவது நிரையீற்று வஞ்சியுரிச்சீர் முன் நிரைமுதல் நிரைபு முதல் வஞ்சியுரிச்சீர் வருதலும், நிரை முதல் நிரைபு முதல் இயற்சீர் வருதலும், நிரைபு முதல் ஆசிரியவுரிச்சீர் வருதலும், நிரைமுதல் வெண்பாவுரிச்சீர் வருதலும், நிரை அல்லது நிரைபு என்னும் ஓரசைச்சீர் வருதலும் என ஐந்து வகையாம்.

ஒன்றாது வருவது நிரையீற்று வஞ்சியுரிச்சீர் முன் நேர்முதல் நேர்பு முதல் வஞ்சியுரிச்சீர் வருதலும், நேர்முதல் நேர்பு முதல் இயற்சீர் வருதலும், நேர்புமுதல் ஆசிரியவுரிச்சீர் வருதலும், நேர் முதல் வெண்பாவுரிச்சீர் வருதலும், நேர் அல்லது நேர்பு என்னும் ஓரசைச்சீர் வருதலுமென ஐந்து வகைப்படும்.

உரியசை யீற்று வஞ்சியுரிச்சீர் உறழ்ச்சி 10

உரியசை யீற்று வஞ்சியுரிச்சீர் உறழ்ச்சியும் அவ்வாறே உறழப் பத்து வகைப்படும் என்றனர் இளம்பூரணர்.[1]

அசைச்சீரடி உறழ்ச்சி 10

அசைசீரடியும் அவ்வாறே இருவகையாக்கி உறழப் பத்துவகையாகும் என்றனர் இளம்பூரணர்.[2]

---

1. வஞ்சியுரிற்சீர் நேர்பு ஈறும் நிரைபு ஈறும் என இருவகையாம். நேர்பு ஈறு ஒன்றுவன ஐந்தும் ஒன்றாதன ஐந்தும்; நிரைபு ஈறும் ஒன்றுவன ஐந்தும் ஒன்றாதன ஐந்தும் என இருபது வகைப்படுகின்றன. இளம்பூரணர் எக்காரணத்தால் பத்து வகை என்றனர் என்பது அவர் கூற்றால் புலனாகவில்லை.

2. இதுவும் நேரும் நேர்பும் ஒன்றியன ஐந்தும் ஒன்றாதன ஐந்தும், நிரையும் நிரைபும் ஒன்றியன ஐந்தும் ஒன்றாதன ஐந்தும் என இருபதுவகைப்படும். இளம்பூரணர் எக்காரணத்தால் பத்துவகைப்படும் என்றனர் என்பது அவர்கூற்றால் விளங்கவில்லை.

இளம்பூரணர் கூற்றில் எழும் ஐயவினா

இளம்பூரணர் எண்பத்து நான்கு சீரால் எழுபது வகை உறழ்ச்சி கொண்டுள்ளனர். வஞ்சியுரிச்சீர் அறுபதை நேரீறு, நிரையீறு, உரியசையீறு என்று மூன்றாகவும் பிரிக்கலாமே. அப்பொழுது ஏழாகாமல் எட்டாகுமே. இதனால் எழுபது வகையை விளக்க வேண்டி அதற்கியைய அமைத்துக் கொண்டார் போலும்.

இளம்பூரணர் கூறும் அறுநூற்றிருபத்தைந்தடி

இனி இளம்பூரணர் கூறும் அறுநூற்றிருபத்தைந்தடிகளைப் பார்ப்போம். அசைச்சீர், இயற்சீர், ஆசிரியவுரிச்சீர், வெண்பாவுரிச்சீர், வஞ்சியுரிச்சீர் என்னும் ஐந்தினையும் தனித்தனி நிறுத்தி, இவ்வைந்துசீரும் வரும் சீராக உறழும் வழி இருபத்தைந்து விகற்பமாம்: அவ்விருபத்தைந்தின் கண்ணும் மூன்றாவது சீராய் நிற்கும்படி அவ்வைந்து சீரும் வருஞ்சீராக உறழும்வழி நூற்றிருபத்தைந்து விகற்பமாம்; அந்நூற்றிருபத்தைந்தடிகளின் கண்ணும் நான்காவது சீராய் நிற்கும்படி அவ்வைந்து சீரும் வருஞ்சீராக உறழும்வழி அறுநூற்றிருபத்தைந்து அளவடிகளாம் என்றனர்.

இவ்வாறு கொள்வதில் உள்ள தடைகள்

இளம்பூரணர் இவ்வாறு அறுநூற்றிருபத்தைந்தடிகளை அமைத்துக் கொண்டது எளிதில் விளங்கக் கூடிய தொன்றாயினும், அசைச்சீர் நான்கினையும், இயற்சீர் பத்தினையும், ஆசிரியவுரிச்சீர் ஆறினையும் வெண்பாவுரிச்சீர் நான்கினையும், வஞ்சியுரிச்சீர் அறுபதினையும் ஒவ்வொன்றாகக் கொண்டு பதினேழ் நிலத்த வாகிய அவ்வடிகளை ஆக்கிக் கொண்டது பொருந்தாததென்றே தெரிகின்றது. ஏன் எனில் புலி வழங்கு பொருப்பு களிறு வரு பொருப்பு களிறு வழங்கு பொறுப்பு முதலிய வஞ்சிச்சீர்களும், அரவு செலவு முதலான ஆசீரியவுரிச்சீர்களும் ஆறெழுத்துச் சீர்களாதவின் இவற்றால் ஆகும் அடிகள் பதினேழ் நிலத்தைக் கடந்து செல்லுமே!

பேராசிரியர் கருத்து

எழுபது வகை

இனிப் பேராசிரியர் பதினேழ் நிலத்து எழுபது வகைமையின் வழுவிலவாகி என்பதற்குப் பதினேழ் நிலத்து எழுபது வகைக் குற்றம் நீங்கி பதினேழ் நிலத்து எழுபது வகையாகத் தளைகொள்ளும் நெறியில் வழுவிலவாகி என்று உரைத்துக் கொள்கின்றார்.

எழுபது வகைக்கு அவர் கூறுவன : ஆசிரியப்பாவுள் இயற்சீரும், ஆசிரிய வுரிச்சீரும், அசைச்சீரும் வந்து ஆசிரியத்தளை தட்கும். அவற்றுள் இயற்சீர் பத்தில் புளிமா மட்டும் ஒரு நிலைத்தாகும்; ஏனைய ஒன்பதும் குற்றுகரம் எழுத்தெண்ணப் பெறாமையானும் குற்றுகர முற்றுகர வேறுபாட்டாலும் பதினெட்டாகிப் புளிமாவுடன் கூட அவ்வியற்சீர் பத்தொன்ப தாயின.

ஆசிரியப்பாவுள் மேற்கூறிய இயற்சீர் பத்தொன்பதும், ஆசிரியவுரிச்சீர் நான்கும் அசைச்சீர் நான்கும் கட்டளையடிக்கு வரும் ஆதலின் ஆசிரியப்பாவிற்கு இருபத்தேழு சீராயின.[3]

வெண்பாவினுள் மேற்குறிப்பிட்ட இயற்சீர் பத்தொன்பதும் வெண்பாவுரிச்சீர் நான்கும் அசைச்சீர் நான்கும் கட்டளையடிக்கு வருமாதலின் வெண்பாவிற்கு இருபத்தேழு சீராயின.[4]

கலிப்பாவினுள் தேமாவின் இரு நிலைமையும் புளிமா ஒன்றும் நீங்கிய இயற்சீர் பதினாறும் ஆசிரியவுரிச்சீர் நான்கும் வெண்சீர் நான்கும் கலிப்பாவின் கட்டளையடிக்கு வருமாதலின் கலிப்பாவிற்கு வருஞ்சீர் இருபத்து நான்காயின.[5]

---

3. ஆசிரியவுரிச்சீர் ஆறில் நான்கை மட்டும் கொண்டதற்குக் காரணம் விளங்கவில்லை.
4. வெண்பாவின் நாற்சீர் கொண்ட கட்டளையடியில் அசைச்சீர் நான்கில் நேரசை நிரையசைச்சீர் இடம் பெறுமா?
5. கலிப்பாவிலும் ஆசிரியவுரிச்சீர் ஆறுள் நான்கினையே கொண்டார். அங்ஙனமாயின் விலக்கப்பட்ட ஆசிரியவுரிச் சீரிரண்டும் எப்பாவில் வரும்?

இவற்றைக் (27 + 27 + 24) கூட்ட எழுத்தெட்டாயின. இவ்வெழுபத்தெட்டுள் ஆசீரியத்துள் வந்த அசைச்சீர் நான்கினையும் வெண்பாவினுள் வந்த அசைச்சீர் நான்கினையும் இயற்சீர்ப்பாற் படுத்துத் தளைகொள்ளுக (தொல். செய். 28) என்றமையின் அவ்வாறு அவற்றை இயற்சீருள் அடக்கின் மூன்று பாவிற்கும் கட்டளையடிக்கு வருஞ்சீர் எழுபதாயின. அவ்வெழுபது சீரும் வழுவாமல் நின்று தட்க வேண்டுமென்பான் எழுபது வகைமையின் வழுவிலவாகி என்றான் என்பர் பேராசிரியர்.

பேராசிரியர் கூற்றில் எழும் ஐயம்

இயற்சீர் பத்தினுள் புளிமாவை நீக்கி இரண்டு நிலைப்படுத்தினார். ஆசிரியவுரிச்சீர் நான்கினையும் இரண்டு நிலைப்படுத்துதல் கூடாதா? ஆசிரியவுரிச்சீர் ஆறனுள் இரண்டினை நீக்குவானேன்? இயற்சீருள் தேமா, கருவிளம் கூவிளம் இருநிலைமை பெற்றாற்போல வெண்பாவுரிச்சீருள் தேமாங்காய், கருவிளங்காய் கூவிளங்காய் இருநிலையை அடையாவா? என்றெல்லாம் வினாக்கள் தோன்றுகின்றன. இவற்றிற்கு விடைகாண வேண்டும்.

பேராசிரியர் கூறும் அறுநூற்றிருபத்தைந்தடி 6

ஆசிரியத்துள் வருமெனப்பட்ட சீர் இருபத்தேழும் ஒவ்வொன்று பன்னிரண்டுவரை ஏறிவரும் ஆதலின், ஒவ்வொன்றையும் பன்னிரண்டாயுறழ ஆசிரியவடி முந்நூற் றிருபத்து நான்காயின.

ஆசிரியவடி 324

எவ்வாறெனில்? ஆசிரியத்துள் வருஞ்சீர் இருபத்தேழுள் நுந்தை, வண்டு என்னும் இரண்டும் ஓரெழுத்துச் சீராம்; தேமா, மின்னு, வரகு, ஞாயிறு, போதுபூ, போரேறு என்னும் ஆறும் ஈரெழுத்துச் சீராம்; புளிமா, பாதிரி, வலியது, மேவுசீர், நன்னாணு, பூமருது, கடியாறு, விறகுதீ, நீடுகொடி, அரவு என்னும் பத்தும் மூவெழுத்துச் சீராம்; கணவிரி, காருருமு, பெருநாணு, உருமுத்தீ, மழகளிறு, நாணுத்தளை, உரறுபுலி என்னும் ஏழும் நாலெழுத்துச்

சீராம்: நரையுருமு, விரவு கொடி என்னும் இரண்டும் ஐயெழுத்துச் சீராம்; இவ்விருபத்தேழு சீரும் குறிப்பிட்ட அடியிலிருந்து பன்னிரண்டடிவரை ஏறிவரும் ஆதலின் பன்னிரண்டோடு உறழ (27 x 12=324) ஆசிரியவடி முந்நூற்றிருபத்து நான்காயின.

வெண்பாவடி 181

வெண்பாவினுள் வருமெனப்பட்ட இயற்சீர் பத்தொன்பதும் வெண்பாவுரிச்சீர் நான்கும் அசைச்சீர் நான்கும் ஆகிய சீர் இருபத்தேழனை உறழ வெண்பாவடி நூற்றெண்பத்தொன்று வரும்.

எவ்வாறெனில்? சிந்தடியாகிய ஏழெழுத்தடியும் எட்டெழுத்தடியும் ஒன்பதெழுத்தடியும் அளவடியுள் பத்தெழுத்தடியும் ஆகிய நான்கெழுத்தடியும் முதலாய் நிற்ப, ஏழெழுத்தடி வெண்பாவின் இறுதியடியான பதினான் கெழுத்தடியளவும் ஏறி எட்டடி பெறும்; எட்டெழுத்தடி பதினான் கெழுத்தடியளவும் ஏறி ஏழடி பெறும்; ஒன்பதெழுத்தடி பதினான்கெழுத்தடியளவும் ஏறி ஆறடி பெறும்; பத்தெழுத்தடி பதினான்கெழுத்தடியளவும் ஏறி ஐந்தடி பெறும்.

வெண்பாவினுள் வரப்பெறும் நுந்தை, வண்டு, ஞாயிறு, போதுபூ, போரேறு என்னும் சீரை ஏழெழுத்தடியிலிருந்து பதினான்கெழுத்தடி வரையுள்ள எட்டடியில் வைத்துறழ

(8 x 5=40) நாற்பது அடியாயின.

தேமா, மின்னு, வரகு, பாதிரி, வலியது, மேவுசீர், நன்னாணு, பூமருது, கடியாறு, விறகுதீ, மாசெல்வாய் என்ற பதினொரு சீரையும் எட்டெழுத்தடி முதல் பதினான் கெழுத்தடிவரையுள்ள ஏழடியில் வைத்துறழ (11 x 7 = 77) எழுபத்தேழு அடியாயின.

புளிமா, அரவு, கணவிரி, காருருமு, பெருவேணு, உருமுத்தீ, மழகளிறு, மாவருவாய், புலிசெல்வாய் என்னும் ஒன்பது சீரை ஒன்பதெழுத்தடி முதல் பதினான்கெழுத்தடி வரையுள்ள ஆறடியில் வைத்துறழ (9 x 6=54) ஐம்பத்து நான்கு அடியாயின.

நனிமுழவு, புலி வருவாய் என்னும் இரண்டு சீரைப் பத்தெழுத்தடி முதல் பதினான்கெழுத்தடி வரையுள்ள ஐந்தடியில் வைத்துறழ (2 x 5=10) பத்தடியாயின. ஆக வெண்பாவடி (40 + 77 + 54 + 10) நூற்றெண்பத்தொன்று ஆயின.[7]

கலியடி 120

கலிப்பாவில் வருமென்ற நேரீற்றியற் சீர் மூன்றெழுத்து எஞ்சிய இயற்சீர் பதினாறும், ஆசிரியவுரிச் சீர் நான்கும், வெண்சீர் நான்கும், ஆகிய இருபத்து நான்கு சீர்களை உறழக் கலியடி நூற்றிருபதாம்.

அளவடி மிகுதி உளப்படத் தோன்றி, இருநெடிலடியுங் கலியிற்குரிய என்னும் நூற்பா விதியால் அளவடி மிகுதியாய பதின்மூன்றெழுத்தடியும், நெடிலடியாகிய பதினைந் தெழுத்தடியும் பதினாறெழுத்தடியும் பதினான்கெழுத்தடியும் முதலாக ஒரோவொன்று ஐந்தடி உறழ்ந்து முறையே பதினேழு, பதினெட்டு, பத்தொன்பது இருபது என்னும் எழுத்துள்ள அடிவரை உயரும்.

எவ்வாறெனில்? ஞாயிறு, போதுபூ, போரேறு என்னும் ஈரெழுத்துச் சீர் மூன்றையும் பதின்மூன்றெழுத்து வரையுள்ள ஐந்தடியில் வைத்துறழ (3 x 5=15) பதினைந்தடியாயின.

பாதிரி, வலியது, மேவுசீர், நன்னாணு, பூமருது, கடியாறு, விறகுதீ, மாசெல்வாய், நீடுகொடி என்னும் மூவெழுத்துச் சீர் ஒன்பதனையும் பதினான்கெழுத்து முதல் பதினெட் டெழுத்தளவும் உள்ள ஐந்தடியில் வைத்துறழ (9 x 5 = 45) நாற்பத்தைந்தடி யாயின.

---

6. ஆசிரியவடி: 324; வெண்பாஅடி 181; கலிப்பா அடி 120 : 625.
7. ஆசிரியத்திலும், வெண்பாவிலும் அசைச்சீர் நான்கு வரும் என்று எண்ணிக்கைக்குக் கூட்டினார். நாள், மலர் என்னும் அசைச்சீர்களை இங்கே எடுத்தாளவில்லை.

கணவிரி, காருருமூ, பெருநாணு, உருமுத்தீ, மழகளிறு, மாவருவாய், புலிசெல்வாய், நாணுத்தளை, உரறுபுலி என்னும் நாலெழுத்துச் சீர் ஒன்பதனையும் பதினைந்தெழுத்து முதல் பத்தொன்ப தெழுத்தளவும் உள்ள ஐந்தடியில் வைத்துறழ

(9 x 5=45) நாற்பத்தைந்தடியாயின.

நரையுருமு, புலிவருவாய், விரவுகொடி என்னும் ஐந்தெழுத்துச் சீர் மூன்றனையும் பதினாறெழுத்தடி முதல் இருபதெழுத்தடிகாறு முள்ள மூன்றடியில் வைத்துறழ

(3 x 5 = 15) பதினைந்தடியாம்.

ஆகக் கலிப்பாவடி (15+ 45 + 45 + 15) நூற்றிருபதாயின.

நச்சினார்க்கினியர் கருத்தும் இதுவே

நச்சினார்க்கினியர் ஐவகையடியும் என்னும் நூற்பாவிற்கு மேல் நாற்சீரடியினை ஐவகையாகக் கூறி இதனானே அறுநூற்றிருபத்தைந்தாகுமென அவற்றின் விகற்பமுங் கூறினார் என்று கருத்துரை கூறி மேற்கூறிய ஐவகை யடியும் விரிக்குமிடத்து பொருள்வகையமைந்த பதினேழ் நிலத்தவாய எழுபது வகைக் குற்றம் நீங்கி அறுநூற்றிருபத்தைந்தாம் என்று உரை கூறியுள்ளார்.

அவர் எழுபது வகையின் வழுவில என்பதற்கும் அறுநூற்றிருபத்தைந்தாகும்மே என்பதற்கும் பேராசிரியர் கருத்தையே தழுவி உரையெழுதியுள்ளார்.

யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் கருத்து

எழுபது வகைமையின் வழு

யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் எழுபது வகை என்பதை எழுபது தளை வழு வென்றே கொண்டு, ஆசிரிய நிலம் பதினேழுள்ளும் வெண்டளை தட்பப் பதினேழும் கலித்தளை தட்பப் பதினேழுமாய் ஆசிரியப்பாவிற்கு முப்பத்து நான்கு தளை வழுவாம். வெள்ளை நிலம் பத்தினுள்ளும் (சிந்து 3 அளவு 5

நெடில் 2 ஆகப் பத்து) ஆசிரியத்தளை தட்டப் பத்தும் கலித்தளை தட்டப் பத்துமாய் வெண்பாவிற்கு இருபது தளை வழுவாம். கலிநிலம் எட்டினுள்ளும் (அளவடி மிகுதி 2, நெடில் 3, கழிநெடில் 3) வெண்டளை தட்ட எட்டும் ஆசிரியத் தளை தட்ட எட்டுமாய்க் கலிப்பாவிற்குப் பதினாறு தளைவழுவாம். ஆக மூன்று பாவிற்குஞ் சொன்ன தளைவழு (34 + 20 + 16) எழுபதாயிற்று என்பர்.

பேராசிரியர் மறுப்பு

மேற்கூறிய கருத்தினை ஐவகையடியும் என்னும் நூற்பாவுரையுள் பேராசிரியர் மறுத்துள்ளனர். அம்மறுப்பினை ஆண்டுக் காண்க.

யாப்பருங்கல விருத்தியாசிரியர் கூறும் அறுநூற்றிருபத்தைந்தடி

அவர் ஆசிரியப்பாவில் வருஞ்சீர் இயற்சீர் பத்தும், தன்சீர் ஆறும், அசைச்சீர் நான்கும் எனக் கொண்டு கணக்கிடுவர்.

யாப்பருங்கல விருத்தியாசிரியர் கருத்து

ஆசிரியவடி 261

தன் சீரானும் (ஆசிரியவுச்சீர்) தளை வகுக்கப் படாமையின் நின்றுங் கொள்ளப்படா வெனக் கூறி விலக்கி, இயற்சீர் பத்துள் ஈரெழுத்துச் சீரால் ஐம்பதும் மூவெழுத்துச் சீரால் எண்பத்தெட்டும், நான்கெழுத்துச் சீரால் அறுபத் தொன்றும், ஐந்தெழுத்துச் சீரால் பன்னிரண்டும் ஆக இருநூற்றுப் பதினொன்று அடி இயற்சீர் உறழ்ச்சியால் வரும் என்றனர். இனி ஆசிரியத்துள் நேரசை நேர்பசைகள் ஓரெழுத்தும் ஈரெழுத்துமாக வரும் பொழுதும் நிரையசை நிரைபு அசைகள் ஈரெழுத்தும் மூவெழுத்துமாக வரும்பொழுதும் இவற்றை வைத்து உறழும் முறைப்படி உறழ்ந்தால் இருபத்து நான்கும் இரு பத்தாறுமாய் ஐம்பதடி வரும். இவ்விரண்டனையும் தலைப்பெய்ய ஆசிரியவடி இருநூற்றறுபத்தொன்றாம் என்றனர்.

வெண்பாவடி 232

வெண்பாவில் இயற்சீர்பத்தும் வெண்பாவுரிச்சீர் நான்கும் அசைச்சீர் நான்கும் ஆகப் பதினெட்டுச் சீர்கள் வரும் என்று கொண்டு இயற்சீரும் தன்சீராகிய வெண்பாவுரிச்சீரும் ஆகிய பதினான்கு சீர்களை இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்னும் எழுத்துள்ள சீராகப் பிரித்துக் கொண்டு உறழ்ந்து வெண்பாவுக்குச் சீராலாய அடித்தொகை நூற்றுத் தொன்னூற்றாறு என்றும் நான்கு அசைச்சீர்களை ஓரெழுத்து, ஈரெழுத்து, மூவெழுத்து என்னும் சீர்களாகப் பிரித்துக் கொண்டு உறழ்ந்து நான்கசைச் சீரால் வந்த அடித்தொகை முப்பத்தாறு என்றும் இவ்விரண்டனையும் தலைப்பெய்ய வெண்பாவடி இருநூற்று முப்பத்திரண்டாம் என்றனர். [8]

கலியடி 132

கலிப்பாவில் வெண்பாவுரிச்சீர் நான்கும், ஆசிரியவுரிச்சீரில் நீடு கொடி, குழறுபுலி என்னும் இரண்டும் தேமா, புளிமா என்னும் இரண்டும் நீங்கிய இயற்சீர் எட்டும் ஆகிய பதினான்கு சீர்கள் வரும். கலிப்பாவில் அசைச்சீர் வாரா. இச்சீர்களை இரண்டெழுத்து, மூன்றெழுத்து, நான்கெழுத்து, ஐந்தெழுத்து என்று நான்கு நிலைமையாக்கி இவற்றை உறழ்ந்து காட்டி நூற்று முப்பத்திரண்டடியாம் என்றனர். ஆக ஆசிரியவடி 261, வெண்பாவடி 232, கலியடி 132 ஆக அறு நூற்றிருபத்தைந்தடி யாயின என்றனர் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர்.[9]

இனி என் கருத்து

தொல்காப்பியர் நான்கெழுத்தை முதலாகக் கொண்டு இருபதெழுத்து வரை ஐவகை அடிகளைக் கூறிய பின்னர்

---

8. ஆசிரியவடி கொள்ளும்போது ஆசிரியவுரிச்சீர் ஆறனையும் தன்சீருள்வழித் தளைவகை வேண்டா என்ற நூற்பாவினைக் காட்டி நீக்கினார். வெண்பாவடி கொள்ளும்போது வெண்பாவுரிச்சீர் நான்கினை அவ்வாறு நீக்காமல் கொண்டே அடி கூறுகிறார். இது பொருந்துமா?

9. விரிவஞ்சிச் சுருக்கப்பட்டது.

சீர்நிலைதானே ஐந்தெழுத் திறவாது
நேர்நிரை வஞ்சிக் காறும் ஆகும்

என்ற வடிவில் கூறியதாக ஒரு நூற்பா இளம்பூரணர் உரையில் காணப்படுகின்றது. இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் சீர்க்கு எழுத்து வரையறை உணர்த்துதல் நுதலிற்று என்று கருத்துரை கூறிச் சீர்நிலை ஐந்தெழுத்தின் மிகாது நேர் இறுதியாங்காலத்து. நிரையீறாகிய வஞ்சியுரிச்சீர்க்கு ஆறெழுத்தும் ஆகும் என்று உரை கூறி எனவே இருபதெழுத்தின் மிக்க நாற்சீரடி இல்லையாம் என்றனர்.

பேராசிரியர் மேற்கண்ட நூற்பாவை இரண்டாகக் கொண்டு சீர்நிலை தானே ஐந்தெழுத் திறவாது என்ற முதல் நூற்பாவிற்கு இதுமேல் எழுத்தெண்ணி அடி வகுக்கப்பட்ட ஐவகை யடிக்கும் சீரும் எழுத்தெண்ணியே வகுக்கின்றது என்று கருத்துக் கூறி. சீரது நிலைமைதான் ஐந்தெழுத்தின் இறந்து வாராது என்றவாறு; பெருமைக்கு எல்லை கூறி வரையறுக்கவே, சிறுமைக்கு எல்லை வறையறைப்படாது ஓரெழுத்து முதலாக வருமென்பதாம் என்றனர். யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரும் வெண்பா ஆசிரியம் கலியுள் வருஞ்சீர் ஐந்தெழுத்தின் மிகா என்றனர்.

அடி அதிகாரத்தில் மேற்கண்ட இவற்றையெல்லாம் படித்துக் கருத்தி லிருத்திக் கொண்டு

ஐவகையடியும் விரிக்குங் காலை
மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்தும்
எழுபது வகையின் வழுவில வாகி
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே

என்னும் நூற்பாவிற்கு வருவோம்.

இந்நூற்பா மேலே சிறந்ததாய்க் குறிப்பிட்ட அளவடியுள் வருமென்ற ஐவகையடியும் பதினேழ் நிலத்தவாய் எழுபது வகையுள் தப்பாது அறுநூற்றிருபத்தைந்தடியாக வரும் என்ற செய்தியைக் கூறுகின்றது என்பதை அறிந்து கொள்ளுகின்றோம்.

இளம்பூரணர் அசைச்சீர், இயற்சீர், ஆசிரியவுரிச்சீர், வெண்சீர், வஞ்சியுரிச்சீர் என்னும் ஐந்தினையும் தனித்தனி நிறுத்தி இவ்வைந்து சீரும் வருஞ்சீராக உறழ இருபத்தைந்து விகற்பமாம்; இவ்விருபத்தைந்தின் கண்ணும் இவ்வைந்து சீரும் வருஞ்சீராக உறழ நூற்று இருபத்தைந்து விகற்பமாம். இந்நூற்றிருபத்தைந்து விகற்பத்தின் கண்ணும் இவ்வைந்து சீரும் வருஞ்சீராக உறழ அறுநூற்றிருபத்தைந்து அளவடியாம் என்றனர். ஆனால் ஆறெழுத்து வஞ்சிச் சீரினை வைத்து உறழப் பதினேழ் நிலத்தைக் கடந்து இருபதெழுத்தின் மேலும் வரும். இளம்பூரணர் கருத்திற்கு மூன்றெழுத்து நான்கெழுத்து, ஐந்தெழுத்து வஞ்சியுரிச் சீர்களையே கொள்ள வேண்டும்.

பேராசிரியரும், நச்சினார்க்கினியரும், யாப்பருங்கல விருத்தி யுரையாசிரியரும் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பாக்கட்கென சீர் வரையறுத்துக் கொண்டு அவற்றைத் தம் மனம் போனவாறு கற்பனை செய்து கொண்டு உறழ்ந்து அடிகளை ஆக்கிக் கொள்கின்றனர். பேராசிரியர் ஆசிரியவடி 324 என்று கூற விருத்தியுரையாசிரியர் 261 என்கின்றனர். கலியடி 120 132 என்றும் மாறுபடுகின்றனர்.

தொல்காப்பியர் இவர்கள் கருத்தின்படி அறுநூற்றிரு பத்தைந்தடிகளைக் கூறியிருக்க மாட்டார் என்பதே என் கருத்தாகும். ஏன் எனில்? எழுத்துக் கணக்குள்ள கட்டளை யடிகளை இவ்வளவு சிக்கலாகவும் கருத்து வேறுபாடுள்ள தாகவும் உறழ்ந்துணரும்படித் தெளிவற்ற வகையில் **தெளிவுறக் கூறும் இயல்புடைய தொல்காப்பியர் கூறுவதற்கு நியாயமேயில்லை.**

கட்டளையடிக்குக் கட்டளைச்சீர்

அளவடியில் வரும் ஐவகையடியாம் பதினேழ் நிலத்தவாகிய அறு நூற்றிருபத்தைந்து கட்டளையடியாக வருமேயானால், இக்கட்டளையடிகளைத் தோற்றுவிக்கக் கட்டளைச்சீரும் வேண்டும். ஆகையால், நாம் சீர்களை ஓரெழுத்துச்சீர், ஈரெழுத்துச்சீர், மூவெழுத்துச்சீர், நான்கெழுத்துச்சீர் ஐந்தெழுத்துச்சீரென்று முதற்கண் வகுத்து வைத்துக் கொள்வோம்.

அறுநூற்றிருபத்தைந்தடியாமாறு உறழுந் திறம்

மேலே குறிப்பிட்ட ஐவகைச் சீர்களையும் ஐந்து படிகளாக நிறுத்தி, இவ்வைந்து சீர்களையும் தனித்தனி வருஞ்சீராக உறழ்ந்தால் இருபத்தைந்து விகற்பமாம்; இவ்விருபத்தைந்து விகற்பங்களையும் தனித்தனி இருபத்தைந்து ஐந்துபடிகளாக நிறுத்தி இவ்வைந்து சீர்களையும் தனித்தனி வருஞ்சீராக உறழ்ந்தால் அறுநூற்றிருபத்தைந்து கட்டளை அளவடிகளாகும்.

அறுநூற்றிருபத்தைந்தடியைப் பதினேழ் நிலமாகப் பிரித்தல்

இவ்வாறு உறழ்ந்த அறுநூற்றிருபத்தைந்தடிகளைத் தனித்தனி பதினேழ் நிலத்திற்குரியனவாகப் பிரித்தால் நான்கெழுத்தடி ஒன்றும் ஐந்தெழுத்தடி நான்கும் ஆறெழுத்தடி பத்தும் ஆகக் குறளடி பதினைந்தாம்; ஏழெழுத்தடி இருபது, எட்டெழுத்தடி முப்பத்தைந்து; ஒன்பதெழுத்தடி ஐம்பத்திரண்டு ஆகச் சிந்தடி நூற்றேழாம்; பத்தெழுத்தடி அறுபத்தெட்டு, பதினோரெழுத்தடி எண்பது, பன்னிரண்டெழுத்தடி எண்பத்தைந்து, பதின்மூன்றெழுத்தடி எண்பது, பதினான்கெழுத்தடி அறுபத்தெட்டு ஆக அளவடி முந்நூற்றெண்பத்தொன்றாம்; பதினைந்தெழுத்தடி ஐம்பத்திரண்டு, பதினாறெழுத்தடி முப்பத்தைந்து பதினேழெழுத்தடி இருபது ஆக நெடிலடி நூற்றேழாம். பதினெட்டெழுத்தடி பத்து, பத்தொன்பதெழுத்தடி நான்கு இருபதெழுத்தடி ஒன்று ஆகக் கழிநெடிலடி பதினைந்தாம்.

குறளடி	15
சிந்தடி	107
அளவடி	381
நெடிலடி	107
கழிநெடிலடி	15
	625

இக்கணக்கில் குறளடியும் கழிநெடிலடியும் ஆகிவை இரண்டும் சிந்தடியும் நெடிலடியுமாகிய இரண்டும் எண்ணிக்கையால் ஒத்திருத்தலைக் காண்க.

இன்னும் குறளடியில் நான்கெழுத்தடியும் கழிநெடிலடியில் இருபதெழுத்தடியுமாகிய இரண்டும், குறளடியில் ஐந்தெழுத்தடியும் கழிநெடிலடியில் பத்தொன்ப தெழுத்தடியு மாகிய இரண்டும் குறளடியில் ஆறெழுத்தடியும் கழிநெடிலடியில் பதினெட்டெழுத் தடியுமாகிய இரண்டும் சிந்தடியில் ஏழெழுத்தடியும் நெடிலடியில் பதினேழெழுத் தடியுமாகிய இரண்டும் சிந்தடியில் எட்டெழுத்தடியும் நெடிலடியில் பதினாறெழுத் தடியுமாகிய இரண்டும் சிந்தடியில் ஒன்பதெழுத்தடியும் நெடிலடியில் பதினைந்தெழுத்துமாகிய இரண்டும் அளவடியில் பத்தெழுத்தடியும் அளவடியில் பதினான்கெழுத் தடியுமாகிய இரண்டும் அளவடியில் பதினோரெழுத்தடியும் பதின்மூன்றெழுத்தடியுமாகிய இரண்டும் எண்ணிக்கையால் ஒத்திருத்தலைக் காண்க. பன்னிரண்டெழுத்தடி இவற்றிற்கெல்லாம் நடுநாயகமாய் எண்பத்தைந்து அடிகளைப் பெற்றுள்ளது.

மேற்கருத்தை விளக்கும் பட்டியல்

	நான்கெழுத்தடி	1
குறளடி 3	ஐந்தெழுத்தடி	4
	ஆறெழுத்தடி	10
	ஏழெழுத்தடி	20
சிந்தடி 3	எட்டெழுத்தடி	35
	ஒன்பதெழுத்தடி	52
	பத்தெழுத்தடி	68
	பதினோரெழுத்தடி	80
அளவடி 5	பன்னிரண்டெழுத்தடி	85 நடு
	பதின்மூன்றெழுத்தடி	80
	பதினான்கெழுத்தடி	68

	பதினைந்தெழுத்தடி	52
நெழலடி 3	பதினாறெழுத்தடி	35
	பதினேழெழுத்தடி	20
	பதினெட்டெழுத்தடி	10
கழிநெழலடி 3	பத்தொன்பதெழுத்தடி	4
	இருபதெழுத்தடி	1
		625

எழுபது வகையின் வழுவிலவாகி

ஆயின், எழுபது வகையின் வழுவிலவாகி என்றதற்கு விளக்கம் என்னவெனில்? இவ்வாறு நூற்றிருபத்தைந்தடிகள் எழுபது வகைப்பட்டு அவற்றுள் ஒன்றாய் வருமென்க (பட்டியலைப் பார்க்க) பக்கம் 22 நான்கெழுத்தடி ஓரெழுத்தசையை முதலாகக் கொண்டும்; ஐந்தெழுத்தடி ஓரெழுத்தசை ஈரெழுத்தசை என்னும் இரண்டசையை முதலாகக் கொண்டும்; ஆறெழுத்தடி ஓரெழுத்தசை, ஈரெழுத்தசை, மூவெழுத்தசை என்னும் மூன்றசையை முதலாகக் கொண்டும்; ஏழெழுத்தடி ஓரெழுத்தசை, ஈரெழுத்தசை, மூவெழுத்தசை, நான்கெழுத்தசை என்னும் நான்கசையை முதலாகக் கொண்டும்; எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று, பன்னிரண்டு, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து, பதினாறு என்னும் எழுத்துள்ள ஒன்பது அடிகளும் ஓரெழுத்துச் சீர் முதலான ஐவகைச் சீர்களை முதலாகக் கொண்டும்; பதினேழெழுத்தடி ஈரெழுத்துச் சீர் முதலான நான்கு சீர்களை முதலாகக் கொண்டும்; பதினெட்டெழுத்தடி மூவெழுத்துச் சீர் முதலான மூன்றெழுத்துக்களை முதலாகக் கொண்டும்; பத்தொன்பதெழுத்தடி நான்கெழுத்துச் சீர் முதலான இரண்டு சீர்களை முதலாகக் கொண்டும்; இருபதெழுத்தடி ஐந்தெழுத்துச் சீரினை மட்டும் முதலாகக் கொண்டும் பிறக்கின்றன.

இவ்வகைகளைக் கூட்டினால் அறுபத்தைந்து வரும். நான்கெழுத்தடி (1) முற்றிலும் ஓரெழுத்துச் சீர்களாகவே வருகின்றது. எட்டெழுத்தடியுள் 32ஆம் எண்ணுள்ள அடி

முற்றிலும் இரண்டெழுத்துச் சீர்களாலேயே வருகின்றது. பன்னிரண்டெழுத்தடியுள் 63ஆம் எண்ணுள்ள அடி சீர் முற்றிலும் மூன்றெழுத்துச் சீர்களாலேயே வருகின்றது. பதினாறெழுத்தடியுள் 94 ஆம் எண்ணுள்ள அடி முற்றிலும் நான்கெழுத்துச் சீர்களாலேயே வருகின்றது. இருபதெழுத்தடி (125) முற்றிலும் ஐந்தெழுத்துச் சீர்களாலேயே வருகின்றது. இவ்வைந்து வகையையும் (65 + 5) அறுபத்தைந்துடன் கூட்ட எழுபதுவகை ஆகின்றன. இவற்றுள் நான்கெழுத்தடியும் இருபதெழுத்தடியும் முறையே ஓரெழுத்தசையை முதலாகக் கொண்டதும் ஓரெழுத்தசைகளையே முற்றிலும் கொண்டதும் எனவும் ஐந்தெழுத்தசையை முதலாகக் கொண்டதும் ஐந்தெழுத் தசைகளையே முற்றிலும் கொண்டதுமெனவும் இருநிலைப் படுமென்க. இவ்வகையால் அறுநூற்றிரு பத்தைந்தடியும் எழுபது வகைப்பட்டன வென்க. இங்ஙனம் ஆதலைப் பட்டியல் நோக்கி உணர்க.

21. பட்டியல்

இருபத்தைந்து விகற்பம்

ஓரெழுத்துச்சீர், ஈரெழுத்துச்சீர், மூவெழுத்துச்சீர், நாலெழுத்துச் சீர், ஐந்தெழுத்துச்சீர் என்னும் ஐவகைச் சீர்களைத் தம்மொடு தாமும் பிறிதுமாய்க் கூட்ட இருபத்தைந்து குறளடியாம்.

(1)	(2)	(3)	(4)	(5)
1-1	2-1	3-1	4-1	5-1
1-2	2-2	3-2	4-2	5-2
1- 3	2-3	3-3	4-3	5-3
1-4	2-4	3-4	4-4	5-4
1-5	2-5	3-5	4-5	5-5

நூற்றிருபத்தைந்து விகற்பம்

மேலே உள்ள இருபத்தைந்து குறளடிகளைத் தனித்தனியே வைத்து, ஓரெழுத்து, ஈரெழுத்து, மூவெழுத்து, நான்கெழுத்து ஐந்தெழுத்துச் சீர்களை உறழ நூற்றிருபத்தைந்து சிந்தடியாகும்.

(1)	(2)	(3)	(4)	(5)
1-1-1	1-2-1	1-3-1	1-4-1	1-5-1
1-1-2	1-2-2	1-3-2	1-4-2	1-5-2
1-1-3	1-2-3	1-3-3	1-4-3	1-5-3
1-1-4	1-2-4	1-3-4	1-4-4	1-5-4
1-1-5	1-2-5	1-3-5	1-4-5	1-5-5

(6)	(7)	(8)	(9)	(10)
2-1-1	2-2-1	2-3-1	2-4-1	2-5-1
2-1-2	2-2-2	2-3-2	2-4-2	2-5-2
2-1-3	2-2-3	2-3-3	2-4-3	2-5-3
2-1-4	2-2-4	2-3-4	2-4-4	2-5-4
2-1-5	2-2-5	2-3-5	2-4-5	2-5-5

(11)	(12)	(13)	(14)	(15)
3-1-1	3-2-1	3-3-1	3-4-1	3-5-1
3-1-2	3-2-2	3-3-2	3-4-2	3-5-2
3-1-3	3-2-3	3-3-3	3-4-3	3-5-3
3-1-4	3-2-4	3-3-4	3-4-4	3-5-4
3-1-5	3-2-5	3-3-5	3-4-5	3-5-5

(16)	(17)	(18)	(19)	(20)
4-1-1	4-2-1	4-3-1	4-4-1	4-5-1
4-1-2	4-2-2	4-3-2	4-4-2	4-5-2
4-1-3	4-2-3	4-3-3	4-4-3	4-5-3
4-1-4	4-2-4	4-3-4	4-4-4	4-5-4
4-1-5	4-2-5	4-3-5	4-4-5	4-5-5

(21)	(22)	(23)	(24)	(25)
5-1-1	5-2-1	5-3-1	5-4-1	5-5-1
5-1-2	5-2-2	5-3-2	5-4-2	5-5-2
5-1-3	5-2-3	5-3-3	5-4-3	5-5-3
5-1-4	5-2-4	5-3-4	5-4-4	5-5-4
5-1-5	5-2-5	5-3-5	5-4-5	5-5-5

அளவடியில் அறுநூற்றிருபத்தைந்து கட்டளையடி

மேலே உள்ள நூற்றிருபத்தைந்து சிந்தடிகளைத் தனித்தனியே வைத்து ஓரெழுத்து, ஈரெழுத்து, மூவெழுத்து, நாலெழுத்து, ஐந்தெழுத்துச் சீர்களை உறழ அறுநூற்றிருபத்தைந்து அளவடியாம்.

1-1

(1)		(2)		(3)	
1-1-1-1	4	1-1-2-1	5	1-1-3-1	6
1-1-1-2	5	1-1-2-2	6	1-1-3-2	7
1-1-1-3	6	1-1-2-3	7	1-1-3-3	8
1-1-1-4	7	1-1-2-4	8	1-1-3-4	9
1-1-1-5	8	1-1-2-5	9	1-1-3-5	10

(4)		(5)	
1-1-4-1	7	1-1-5-1	8
1-1-4-2	8	1-1-5-2	9
1-1-4-3	9	1-1-5-3	10
1-1-4-4	10	1-1-5-4	11
1-1-4-5	11	1-1-5-5	12

1-2

(6)		(7)		(8)	
1-2-1-1	5	1-2-2-1	6	1-2-3-1	7
1-2-1-2	6	1-2-2-2	7	1-2-3-2	8

1-2-1-3	7	1-2-2-3	8	1-2-3-3	9
1-2-1-4	8	1-2-2-4	9	1-2-3-4	10
1-2-1-5	9	1-2-2-5	10	1-2-3-5	11

(9)

1-2-4-1	8	1-2-5-1	9
1-2-4-2	9	1-2-5-2	10
1-2-4-3	10	1-2-5-3	11
1-2-4-4	11	1-2-5-4	12
1-2-4-5	12	1-2-5-5	13

(10)

1-3

(11)

1-3-1-1	6	1-3-2-1	7	1-3-3-1	8
1-3-1-2	7	1-3-2-2	8	1-3-3-2	9
1-3-1-3	8	1-3-2-3	9	1-3-3-3	10
1-3-1-4	9	1-3-2-4	10	1-3-3-4	11
1-3-1-5	10	1-3-2-5	11	1-3-3-5	12

(12) (13)

(14)

1-3-4-1	9	1-3-5-1	10
1-3-4-2	10	1-3-5-2	11
1-3-4-3	11	1-3-5-3	12
1-3-4-4	12	1-3-5-4	13
1-3-4-5	13	1-3-5-5	14

(15)

1-4

(16)

1-4-1-1	7	1-4-2-1	8	1-4-3-1	9
1-4-1-2	8	1-4-2-2	9	1-4-3-2	10
1-4-1-3	9	1-4-2-3	10	1-4-3-3	11
1-4-1-4	10	1-4-2-4	11	1-4-3-4	12
1-4-1-5	11	1-4-2-5	12	1-4-3-5	13

(17) (18)

(19)		(20)	
1-4-4-1	10	1-4-5-1	11
1-4-4-2	11	1-4-5-2	12
1-4-4-3	12	1-4-5-3	13
1-4-4-4	13	1-4-5-4	14
1-4-4-5	14	1-4-5-5	15

1-5

(21)		(22)		(23)	
1-5-1-1	8	1-5-2-1	9	1-5-3-1	10
1-5-1-2	9	1-5-2-2	10	1-5-3-2	11
1-5-1-3	10	1-5-2-3	11	1-5-3-3	12
1-5-1-4	11	1-5-2-4	12	1-5-3-4	13
1-5-1-5	12	1-5-2-5	13	1-5-3-5	14

(24)		(25)	
1-5-4-1	11	1-5-5-1	12
1-5-4-2	12	1-5-5-2	13
1-5-4-3	13	1-5-5-3	14
1-5-4-4	14	1-5-5-4	15
1-5-4-5	15	1-5-5-5	16

2-1

(26)		(27)		(28)	
2-1-1-1	5	2-1-2-1	6	2-1-3-1	7
2-1-1-2	6	2-1-2-2	7	2-1-3-2	8
2-1-1-3	7	2-1-2-3	8	2-1-3-3	9
2-1-1-4	8	2-1-2-4	9	2-1-3-4	10
2-1-1-5	9	2-1-2-5	10	2-1-3-5	11

(29)		(30)	
2-1-4-1	8	2-1-5-1	9
2-1-4-2	9	2-1-5-2	10
2-1-4-3	10	2-1-5-3	11
2-1-4-4	11	2-1-5-4	12
2-1-4-5	12	2-1-5-5	13

2-2

(31)

2-2-1-1 6
2-2-1-2 7
2-2-1-3 8
2-2-1-4 9
2-2-1-5 10

(32)

2-2-2-1 7
2-2-2-2 8
2-2-2-3 9
2-2-2-4 10
3-2-2-5 11

(33)

2-2-3-1 8
2-2-3-2 9
2-2-3-3 10
2-2-3-4 11
2-2-3-5 12

(34)

2-2-4-1 9
2-2-4-2 10
2-2-4-3 11
2-2-4-4 12
2-2-4-5 13

(35)

2-2-5-1 10
2-2-5-2 11
2-2-5-3 12
2-2-5-4 13
2-2-5-5 14

2-3

(36)

2-3-1-1 7
2-3-1-2 8
2-3-1-3 9
2-3-1-4 10
2-3-1-5 11

(37)

2-3-2-1 8
2-3-2-2 9
2-3-2-3 10
2-3-2-4 11
2-3-2-5 12

(38)

2-3-3-1 9
2-3-3-2 10
2-3-3-3 11
2-3-3-4 12
2-3-3-5 13

(39)

2-3-4-1 10
2-3-4-2 11
2-3-4-3 12
2-3-4-4 13
2-3-4-5 14

(40)

2-3-5-1 11
2-3-5-2 12
2-3-5-3 13
2-3-5-4 14
2-3-5-5 15

2-4

(41)

2-4-1-1 8
2-4-1-2 9
2-4-1-3 10

(42)

2-4-2-1 9
2-4-2-2 10
2-4-2-3 11

(43)

2-4-3-1 10
2-4-3-2 11
2-4-3-3 12

3-4-1-4	11	2-4-2-4	12	2-4-3-4	13
3-4-1-5	12	2-4-2-5	13	2-4-3-5	14
(44)		(45)			
2-4-4-1	11	2-4-5-1	12		
2-4-4-2	12	2-4-5-2	13		
2-4-4-3	13	2-4-5-3	14		
2-4-4-4	14	2-4-5-4	15		
2-4-4-5	15	2-4-5-5	16		

2-5

(46)		(47)		(48)	
2-5-1-1	9	2-5-2-1	10	2-5-3-1	11
2-5-1-2	10	2-5-2-2	11	2-5-3-2	12
2-5-1-3	11	2-5-2-3	11	2-5-3-3	13
2-5-1-4	12	2-5-2-4	12	2-5-3-4	14
2-5-1-5	13	2-5-2-5	11	2-5-3-5	15
(49)		(50)			
2-5-4-1	12	2-5-5-1	13		
2-5-4-2	13	2-5-5-2	14		
2-5-4-3	14	2-5-5-3	15		
2-5-4-4	15	2-5-5-4	16		
2-5-4-5	16	2-5-5-5	17		

3-1

(51)		(52)		(53)	
3-1-1-1	6	3-1-2-1	7	3-1-3-1	8
3-1-1-2	7	3-1-2-2	8	3-1-3-2	9
3-1-1-3	8	3-1-2-3	9	3-1-3-3	10
3-1-1-4	9	3-1-2-4	10	3-1-3-4	11
3-1-1-5	10	3-1-2-5	11	3-1-3-5	12
(54)		(55)			
3-1-4-1	9	3-1-5-1	10		
3-1-4-2	10	3-1-5-2	11		
3-1-4-3	11	3-1-5-3	12		

3-1-4-4	12	3-1-5-4	13
3-1-4-5	13	3-1-5-5	14

3-2

(56)		(57)		(58)	
3-2-1-1	7	3-2-2-1	8	3-2-3-1	9
3-2-1-2	8	3-2-2-2	9	3-2-3-2	10
3-2-1-3	9	3-2-2-3	10	3-2-3-3	11
3-2-1-4	10	3-2-2-4	11	3-2-3-4	12
3-2-1-5	11	3-2-2-5	12	3-2-3-5	13

(59)		(60)	
3-2-4-1	10	3-2-5-1	11
3-2-4-2	11	3-2-5-2	12
3-2-4-3	12	3-2-5-3	13
3-2-4-5	13	3-2-5-4	14
3-2-4-6	14	3-2-5-5	15

3-3

(61)		(62)		(63)	
3-3-1-1	8	3-3-2-1	9	3-3-3-1	10
3-3-1-2	9	3-3-2-2	10	3-3-3-2	11
3-3-1-3	10	3-3-2-3	11	3-3-3-3	12
3-3-1-4	11	3-3-2-4	12	3-3-3-4	13
3-3-1-5	12	3-3-2-5	13	3-3-3-5	14

(64)		(65)	
3-3-4-1	11	3-3-5-1	12
3-3-4-2	12	3-3-5-2	13
3-3-4-3	13	3-3-5-3	14
3-3-4-4	14	3-3-5-4	15
3-3-4-5	15	3-3-5-5	16

3-4

(66)		(67)		(68)	
3-4-1-1	9	3-4-2-1	10	3-4-3-1	11
3-4-1-2	10	3-4-2-2	11	3-4-3-2	12
3-4-1-3	11	3-4-2-3	12	3-4-3-3	13
3-4-1-4	12	3-4-2-4	13	3-4-3-4	14
3-4-1-5	13	3-4-2-5	14	3-4-3-5	15
(69)		(70)			
3-4-4-1	12	3-4-5-1	13		
3-4-4-2	13	3-4-5-2	14		
3-4-4-3	14	3-4-5-3	15		
3-4-4-4	15	3-4-5-4	16		
3-4-4-5	16	3-4-5-5	17		

3-5

(71)		(72)		(73)	
3-5-1-1	10	3-5-2-1	11	3-5-3-1	12
3-5-1-2	11	3-5-2-2	12	3-5-3-2	13
3-5-1-3	12	3-5-2-3	13	3-5-3-3	14
3-5-1-4	13	3-5-2-4	14	3-5-3-4	15
3-5-1-5	14	3-5-2-5	15	3-5-3-5	16
(74)		(75)			
3-5-4-1	13	3-5-5-1	14		
3-5-4-2	14	3-5-5-2	15		
3-5-4-3	15	3-5-5-3	16		
3-5-4-4	16	3-5-5-4	17		
3-5-4-5	17	3-5-5-5	18		

4-1

(76)		(77)		(78)	
4-1-1-1	7	4-1-2-1	8	4-1-3-1	9
4-1-1-2	8	4-1-2-2	9	4-1-3-2	10
4-1-1-3	9	4-1-2-3	10	4-1-3-3	11
4-1-1-4	10	4-1-2-4	11	4-1-3-4	12
4-1-1-5	11	4-1-2-5	12	4-1-3-5	13

(79)

4-1-4-1	10
4-1-4-2	11
4-1-4-3	12
4-1-4-4	13
4-1-4-5	14

(80)

4-1-5-1	11
4-1-5-2	12
4-1-5-3	13
4-1-5-4	14
4-1-5-5	15

4-2

(81)

4-2-1-1	8
4-2-1-2	9
4-2-1-3	10
4-2-1-4	11
4-2-1-5	12

(82)

4-2-2-1	9
4-2-2-2	10
4-2-2-3	11
4-2-2-4	12
4-2-2-5	13

(83)

4-2-3-1	10
4-2-3-2	11
4-2-3-3	12
4-2-3-4	13
4-2-3-5	14

(84)

4-2-4-1	11
4-2-4-2	12
4-2-4-3	13
4-2-4-4	14
4-2-4-5	15

(85)

4-2-5-1	12
4-2-5-2	13
4-2-5-3	14
4-2-5-4	15
4-2-5-5	16

4-3

(86)

4-3-1-1	9
4-3-1-2	10
4-3-1-3	11
4-3-1-4	12
4-3-1-5	13

(87)

4-3-2-1	10
4-3-2-2	11
4-3-2-3	11
4-3-2-4	12
4-3-2-5	13

(88)

4-3-3-1	11
4-3-3-2	12
4-3-3-3	13
4-3-3-4	14
4-3-3-5	15

(89)

4-3-4-1	12
4-3-4-2	13
4-3-4-3	14
4-3-4-4	15
4-3-4-5	16

(90)

4-3-5-1	13
4-3-5-2	14
4-3-5-3	15
4-3-5-4	16
4-3-5-5	17

4-4

(91)		(92)		(93)	
4-4-1-1	10	4-4-2-1	11	4-4-3-1	12
4-4-1-2	11	4-4-2-2	12	4-4-3-2	13
4-4-1-3	12	4-4-2-3	13	4-4-3-3	14
4-4-1-4	13	4-4-2-4	14	4-4-3-4	15
4-4-1-5	14	4-4-2-5	15	4-4-3-5	16
(94)		(95)			
4-4-4-1	13	4-4-5-1	14		
4-4-4-2	14	4-4-5-2	15		
4-4-4-3	15	4-4-5-3	16		
4-4-4-4	16	4-4-5-4	17		
4-4-4-5	17	4-4-5-5	18		
(96)		(97)		(98)	
4-5-1-1	11	4-5-2-1	12	4-5-3-1	13
4-5-1-2	12	4-5-2-2	13	4-5-3-2	14
4-5-1-3	13	4-5-2-3	14	4-5-3-3	15
4-5-1-4	14	4-5-2-4	15	4-5-3-4	16
4-5-1-5	15	4-5-2-5	16	4-5-3-5	17
(99)		(100)			
4-5-4-1	14	4-5-5-1	15		
4-5-4-2	15	4-5-5-2	16		
4-5-4-3	16	4-5-5-3	17		
4-5-4-4	17	4-5-5-4	18		
4-5-4-5	18	4-5-5-5	19		

5-1

(101)		(102)		(103)	
5-1-1-1	8	5-1-2-1	9	5-1-3-1	10
5-1-1-2	9	5-1-2-2	10	5-1-3-2	11
5-1-1-3	10	5-1-2-3	11	5-1-3-3	12
5-1-1-4	11	5-1-2-4	12	5-1-3-4	13
5-1-1-5	12	5-1-2-5	13	5-1-3-5	14

(104)

5-1-4-1 11
5-1-4-2 12
5-1-4-3 13
5-1-4-4 14
5-1-4-5 15

(105)

5-1-5-1 12
5-1-5-2 13
5-1-5-3 14
5-1-5-4 15
5-1-5-5 16

5-2

(106)

5-2-1-1 9
5-2-1-2 10
5-2-1-3 11
5-2-1-4 12
5-2-1-5 13

(107)

5-2-2-1 10
5-2-2-2 11
5-2-2-3 11
5-2-2-4 12
5-2-2-5 13

(108)

5-2-3-1 11
5-2-3-2 12
5-2-3-3 13
5-2-3-4 14
5-2-3-5 15

(109)

5-2-4-1 12
5-2-4-2 13
5-2-4-3 14
5-2-4-4 15
5-2-4-5 16

(110)

5-2-5-1 13
5-2-5-2 14
5-2-5-3 15
5-2-5-4 16
5-2-5-5 17

5-3

(111)

5-3-1-1 10
5-3-1-2 11
5-3-1-3 12
5-3-1-4 13
5-3-1-5 14

(112)

5-3-2-1 11
5-3-2-2 12
5-3-2-3 13
5-3-2-4 14
5-3-2-5 15

(113)

5-3-3-1 12
5-3-3-2 13
5-3-3-3 14
5-3-3-4 15
5-3-3-5 16

(114)

5-3-4-1 13
5-3-4-2 14
5-3-4-3 15

(115)

5-3-5-1 14
5-3-5-2 15
5-3-5-3 16

5-3-4-4	16	5-3-5-4	17
5-3-4-5	17	5-3-5-5	18

5-4

(116)

5-4-1-1	11
5-4-1-2	12
5-4-1-3	13
5-4-1-4	14
5-4-1-5	15

(117)

5-4-2-1	12
5-4-2-2	13
5-4-2-3	14
5-4-2-4	15
5-4-2-5	16

(118)

5-4-3-1	13
5-4-3-2	14
5-4-3-3	15
5-4-3-4	16
5-4-3-5	17

(119)

5-4-4-1	14
5-4-4-2	15
5-4-4-3	16
5-4-4-4	17
5-4-4-5	18

(120)

5-4-5-1	15
5-4-5-2	16
5-4-5-3	17
5-4-5-4	18
5-4-5-5	19

(121)

5-5-1-1	12
5-5-1-2	13
5-5-1-3	14
5-5-1-4	15
5-5-1-5	16

(122)

5-5-2-1	13
5-5-2-2	14
5-5-2-3	15
5-5-2-4	16
5-5-2-5	17

(123)

5-5-3-1	14
5-5-3-2	15
5-5-3-3	16
5-5-3-4	17
5-5-3-5	18

(124)

5-5-4-1	15
5-5-4-2	16
5-5-4-3	17
5-5-4-4	18
5-5-4-5	19

(125)

5-5-5-1	16
5-5-5-2	17
5-5-5-3	18
5-5-5-4	19
5-5-5-5	20

மேற்கண்ட பட்டியலிலிருந்து அடிகளை எடுத்து பிரித்தெழுதப் பட்டுள்ளது.

குறளடி, நாலெழுத்தடியும் ஐந்தெழுத்தடியும் ஆறெழுத்தடியும் என மூன்றாகும்.

குறளடியில் நான்கெழுத்தடி - 1

(1)* 1-1-1-1

குறளடியில் ஐந்தெழுத்தடி - 4

(1) 1-1-1-2
(2) 1-1-2-1
(6) 1-2-1-1
(26) 2-1-1-1

குறளடியில் ஆறெழுத்தடி - 10

(1) 1-1-1-3
(2) 1-1-2-2
(3) 1-1-3-1
(6) 1-2-1-2
(7) 1-2-2-1
(11) 1-3-1-1
(26) 2-1-1-2
(27) 2-1-2-1
(31) 2-2-1-1
(51) 3-1-1-1

சிந்தடி ஏழெழுத்தடியும், எட்டெழுத்தடியும், ஒன்பதெழுத்தடியும் என மூன்றாகும்.

சிந்தடியில் ஏழெழுத்தடி - 20

(1) 1-1-1-4
(2) 1-1-2-3
(3) 1-1-3-2
(4) 1-1-4-1
(6) 1-2-1-3
(7) 1-2-2-2

---

* இது முதற்கொண்டு முதலில் பிறை வளைவுக்குள் தரப்பட்டுள்ள எண்கள் 625 அடிகளின் வரிசை எண்களாகும்

(8) 1-2-3-1
(11) 1-3-1-2
(12) 1-3-2-1
(16) 1-4-1-1
(26) 2-1-1-3
(27) 2-1-2-2
(28) 2-1-3-1
(31) 2-2-1-1
(32) 2-2-2-1
(36) 2-3-1-1
(51) 3-1-1-2
(52) 3-1-2-1
(56) 3-2-1-1
(76) 4-1-1-1

சிந்தடியில் எட்டெழுத்தடி - 35

(1) 1-1-1-5
(2) 1-1-2-4
(3) 1-1-3-3
(4) 1-1-4-2
(5) 1-1-5-1
(6) 1-2-1-4
(7) 1-2-2-3
(8) 1-2-3-2
(9) 1-2-4-1
(11) 1-3-1-3
(12) 1-3-2-2
(13) 1-3-3-1
(16) 1-4-1-2
(17) 1-4-2-1
(21) 1-5-1-1
(26) 2-1-1-4
(27) 2-1-2-3

(28) 2-1-3-2
(29) 2-1-4-1
(31) 2-2-1-3
(32) 2-2-2-2
(33) 2-2-3-1
(36) 2-3-1-2
(37) 2-3-2-1
(41) 2-4-1-1
(51) 3-1-1-3
(52) 3-1-2-2
(53) 3-1-3-1
(56) 3-2-1-2
(57) 3-2-2-1
(61) 3-3-1-1
(76) 4-1-1-2
(77) 4-1-2-1
(81) 4-2-1-1
(101) 5-1-1-1

சிந்தடியில் ஒன்பதெழுத்தடி - 52

(2) 1-1-2-5
(3) 1-1-3-4
(4) 1-1-4-3
(5) 1-1-5-2
(6) 1-2-1-5
(7) 1-2-2-4
(8) 1-2-3-3
(9) 1-2-4-2
(10) 1-2-5-1
(11) 1-3-1-4
(12) 1-3-2-3
(13) 1-3-3-2
(14) 1-3-4-1

(16) 1-4-1-3
(17) 1-4-2-2
(18) 1-4-3-1
(21) 1-5-1-2
(22) 1-5-2-1
(26) 2-1-1-5
(27) 2-1-2-4
(28) 2-1-3-3
(29) 2-1-4-2
(30) 2-1-5-1
(31) 2-2-1-4
(32) 2-2-2-3
(33) 2-2-3-2
(34) 2-2-4-1
(36) 2-3-1-3
(27) 2-3-2-2
(38) 2-3-3-1
(41) 2-4-1-2
(42) 2-4-2-1
(46) 2-5-1-1
(51) 3-1-1-4
(52) 3-1-2-3
(53) 3-1-3-2
(54) 3-1-4-1
(56) 3-2-1-3
(57) 3-2-2-2
(58) 3-2-3-1
(61) 3-3-1-2
(62) 3-3-2-1
(66) 3-4-1-1
(76) 4-1-1-3
(77) 4-1-2-2
(78) 4-1-3-1

(81) 4-2-1-2
(82) 4-2-2-1
(86) 4-3-1-1
(101) 5-1-1-2
(102) 5-1-2-1
(106) 5-2-1-1

அளவடி பத்தெழுத்தடியும், பதினோரெழுத்தடியும், பன்னிரண் டெழுத்தடியும் பதின்மூன்றெழுத்தடியும், பதினான்கெழுத் தடியும் என ஐந்தாம்

அவற்றுள் பத்தெழுத்தடி - 68

(3) 1-1-3-5
(4) 1-1-4-4
(5) 1-1-5-3
(7) 1-2-2-5
(8) 1-2-3-4
(9) 1-2-4-3
(10) 1-2-5-2
(11) 1-3-1-5
(12) 1-3-2-4
(13) 1-3-3-3
(14) 1-3-4-2
(15) 1-3-வரி-1
(16) 1-4-1-4
(17) 1-4-2-3
(18) 1-4-3-2
(19) 1-4-4-1
(21) 1-5-1-3
(22) 1-5-2-2
(23) 1-5-3-1
(27) 2-1-2-5
(28) 2-1-3-4
(29) 2-1-4-3

(30) 2-1-5-2
(31) 2-2-1-5
(32) 2-2-2-4
(33) 2-2-3-3
(34) 2-2-4-2
(35) 2-2-5-1
(36) 2-3-1-4
(37) 2-3-2-3
(38) 2-3-3-2
(39) 2-3-4-1
(41) 2-4-1-3
(42) 2-4-2-2
(43) 2-4-வரி-1
(46) 2-5-2-1
(47) 2-5-1-2
(51) 3-1-1-5
(52) 3-1-2-4
(53) 3-1-3-3
(54) 3-1-4-2
(55) 3-1-5-1
(56) 3-2-1-4
(57) 3-2-2-3
(58) 3-2-3-2
(59) 3-2-4-1
(61) 3-3-1-3
(62) 3-3-2-2
(63) 3-3-3-1
(66) 3-4-1-2
(67) 3-4-2-1
(71) 3-5-1-1
(76) 4-1-1-4
(77) 4-1-2-3
(78) 4-1-3-
(79) 4-1-4-1

(81) 4-2-1-3
(82) 4-2-2-2
(83) 4-2-3-1
(86) 4-3-1-2
(87) 4-3-2-1
(91) 4-4-1-1
(101) 5-1-1-3
(102) 5-1-2-2
(103) 5-1-3-1
(106) 5-2-1-2
(107) 5-2-2-1
(111) 5-3-1-1

அளவடியில் பதினோரெழுத்தடி - 80

(4) 1-1-4-5
(5) 1-1-5-4
(8) 1-2-3-5
(9) 1-2-4-4
(10) 1-2-5-3
(12) 1-3-2-5
(13) 1-3-3-4
(14) 1-3-4-3
(15) 1-3-5-2
(16) 1-4-1-5
(17) 1-4-2-4
(18) 1-4-3-3
(19) 1-4-4-2
(20) 1-4-5-1
(21) 1-5-1-4
(22) 1-5-2-3
(23) 1-5-3-2
(24) 1-5-4-1
(28) 2-1-3-5
(29) 2-1-4-4

(30) 2-1-5-3
(32) 2-2-2-5
(33) 2-2-3-4
(34) 2-2-4-3
(35) 2-2-5-2
(36) 2-3-5-1
(37) 2-3-2-4
(38) 2-3-3-3
(39) 2-3-4-2
(40) 2-3-5-1
(41) 2-4-1-4
(42) 2-4-2-3
(43) 2-4-3-2
(44) 2-4-4-1
(46) 2-5-1-3
(47) 2-5-2-2
(48) 2-5-3-1
(52) 3-1-2-5
(53) 3-1-3-4
(54) 3-1-4-3
(55) 3-1-5-2
(56) 3-2-5-1
(57) 3-2-2-4
(58) 3-2-3-3
(59) 3-2-4-2
(60) 3-2-5-1
(61) 3-3-1-4
(62) 3-3-2-3
(63) 3-3-3-2
(64) 3-3-4-1
(66) 3-4-1-3
(67) 3-4-2-2
(68) 3-4-3-1
(71) 3-5-1-2

(72) 3-5-2-1
(76) 4-1-1-5
(77) 4-1-2-4
(78) 4-1-3-3
(79) 4-1-4-2
(80) 4-1-5-1
(81) 4-2-1-4
(82) 4-2-2-3
(83) 4-2-3-2
(84) 4-2-4-1
(86) 4-3-1-3
(87) 4-3-2-2
(88) 4-3-3-1
(91) 4-4-1-2
(92) 4-4-1-2
(96) 4-5-1-1
(101) 5-1-1-4
(102) 5-1-2-3
(103) 5-1-3-2
(104) 5-1-4-1
(106) 5-2-1-3
(107) 5-2-2-2
(108) 5-2-3-1
(111) 5-3-1-2
(112) 5-3-2-1
(116) 5-4-1-1

அளவடியில் பன்னிரண்டெழுத்தடி - 85

(5) 1-1-5-5
(9) 1-2-4-5
(10) 1-2-5-4
(13) 1-3-3-5
(14) 1-3-4-4
(15) 1-3-5-3

(17) 1-4-2-5
(18) 1-4-3-4
(19) 1-4-4-3
(20) 1-4-5-2
(21) 1-5-1-5
(22) 1-5-2-4
(23) 1-5-3-3
(24) 1-5-4-2
(25) 1-5-5-1
(29) 2-1-4-5
(30) 2-1-5-4
(33) 2-2-3-5
(34) 2-2-4-4
(35) 2-2-5-3
(37) 2-3-2-5
(38) 2-3-3-4
(39) 2-3-4-3
(40) 2-3-5-2
(41) 2-4-1-5
(42) 2-4-2-4
(43) 2-4-3-3
(44) 2-4-4-2
(45) 2-4-5-1
(46) 2-5-1-4
(47) 2-5-2-3
(48) 2-5-3-2
(49) 2-5-4-1
(53) 3-1-3-5
(54) 3-1-4-4
(55) 3-1-5-3
(57) 3-2-2-5
(58) 3-2-3-4
(59) 3-2-4-3
(60) 3-2-5-2

(61) 3-3-1-5
(62) 3-3-2-4
(63) 3-3-3-3
(64) 3-3-4-2
(65) 3-3-5-1
(66) 3-4-1-4
(67) 3-4-2-3
(68) 3-4-3-2
(69) 3-4-4-1
(71) 3-5-1-3
(72) 3-5-2-2
(73) 3-5-3-1
(77) 4-1-2-5
(78) 4-1-3-4
(79) 4-1-4-3
(80) 4-1-5-2
(81) 4-2-1-5
(82) 4-2-2-4
(83) 4-2-3-3
(84) 4-2-4-2
(85) 4-2-5-1
(86) 4-3-1-4
(87) 4-3-2-
(88) 4-3-3-2
(89) 4-3-4-1
(91) 4-4-1-3
(92) 4-4-2-2
(93) 4-4-3-1
(96) 4-5-1-2
(97) 4-5-2-1
(101) 5-1-1-5
(102) 5-1-2-4
(103) 5-1-3-3
(104) 5-1-4-2

(105) 5-1-5-1
(106) 5-2-1-4
(107) 5-2-2-3
(108) 5-2-3-2
(109) 5-2-4-1
(111) 5-3-1-3
(112) 5-3-2-2
(113) 5-3-3-1
(116) 5-4-1-2
(117) 5-4-2-1

அளவடியில் பதின்மூன்றெழுத்தடி - 80

(10) 1-2-5-5
(14) 1-3-4-5
(15) 1-3-5-4
(18) 1-4-3-5
(19) 1-4-4-4
(20) 1-4-5-3
(22) 5-1-2-5
(23) 1-5-3-4
(24) 1-5-4-3
(25) 1-5-5-2
(30) 2-1-5-5
(34) 2-2-4-5
(35) 2-2-5-4
(38) 2-3-3-5
(39) 2-3-4-4
(40) 2-3-5-3
(42) 2-4-2-5
(43) 2-4-3-4
(44) 2-4-4-3
(45) 2-4-5-2
(46) 2-5-1-5
(47) 2-5-2-4

(48) 2-5-3-3
(49) 2-5-4-2
(50) 2-5-5-1
(54) 3-1-4-5
(55) 3-1-5-4
(58) 3-2-3-5
(59) 3-2-4-4
(60) 3-2-5-3
(62) 3-3-2-5
(63) 3-3-3-4
(64) 3-3-4-3
(65) 3-3-5-2
(66) 3-4-1-5
(67) 3-4-2-4
(68) 3-4-3-3
(69) 3-4-4-2
(70) 3-4-5-1
(71) 3-5-1-4
(72) 3-5-2-3
(73) 3-5-3-2
(74) 3-5-4-1
(78) 4-1-3-5
(79) 4-1-4-4
(80) 4-1-5-3
(82) 4-2-4-5
(83) 4-2-3-4
(84) 4-2-4-3
(85) 4-2-5-2
(86) 4-3-1-5
(87) 4-3-2-4
(88) 4-3-3-3
(89) 4-3-4-2
(90) 4-3-5-1
(91) 4-4-1-4

(92) 4-4-2-3
(93) 4-4-3-2
(94) 4-4-4-1
(96) 4-5-1-3
(97) 4-5-2-2
(98) 4-5-3-1
(102) 5-1-2-5
(103) 5-1-3-4
(104) 5-1-4-3
(105) 5-1-5-2
(106) 5-2-1-5
(107) 5-2-2-4
(108) 5-2-3-3
(109) 5-2-4-2
(110) 5-2-5-1
(111) 5-3-1-4
(112) 5-3-2-3
(113) 5-3-3-2
(114) 5-3-4-1
(116) 5-4-1-3
(117) 5-4-2-2
(118) 5-4-3-1
(121) 5-5-1-2
(122) 5-5-2-1

அளவடியில் பதினான்கெழுத்தடி-68

(15) 1-3-5-5
(19) 1-4-4-5
(20) 1-4-5-4
(23) 1-5-3-5
(24) 1-5-4-4
(25) 1-5-5-3
(35) 2-2-5-5
(39) 2-3-4-5

(40) 2-3-5-4
(43) 2-4-3-5
(44) 2-4-4-4
(45) 2-4-5-3
(47) 2-5-2-5
(48) 2-5-3-4
(49) 2-5-4-3
(50) 2-5-5-2
(55) 3-1-5-5
(59) 3-2-4-5
(60) 3-2-5-4
(63) 3-3-3-5
(64) 3-3-4-4
(65) 3-3-5-3
(67) 3-4-2-5
(68) 3-4-3-4
(69) 3-4-4-3
(70) 3-4-5-2
(71) 3-5-1-5
(72) 3-5-2-4
(73) 3-5-3-3
(74) 3-5-4-2
(75) 3-5-5-1
(79) 4-1-4-5
(80) 4-1-5-4
(83) 4-2-3-5
(84) 4-2-4-4
(85) 4-2-5-3
(87) 4-3-2-5
(88) 4-3-3-4
(89) 4-3-4-3
(90) 4-3-5-2
(91) 4-4-2-4
(93) 4-4-3-3

(94) 4-4-4-2
(95) 4-4-5-1
(96) 4-5-1-4
(97) 4-5-2-3
(98) 4-5-3-2
(99) 4-5-4-1
(103) 5-1-3-5
(104) 5-1-4-4
(105) 5-1-5-3
(107) 5-2-2-5
(108) 5-2-3-4
(109) 5-2-4-3
(110) 5-2-5-2
(111) 5-3-1-5
(112) 5-3-2-4
(113) 5-3-3-3
(114) 5-3-4-2
(115) 5-3-5-1
(116) 5-4-1-4
(117) 5-4-2-3
(118) 5-4-3-2
(119) 5-4-4-1
(121) 5-5-1-3
(122) 5-5-2-2
(123) 5-5-3-1

நெடிலடியில் பதினைந்தெழுத்தடி - 52

(20) 1-4-5-5
(24) 1-5-4-5
(25) 1-5-5-4
(40) 2-3-5-5
(44) 2-4-4-5
(44) 4-2-4-1
(45) 2-4-5-4

(48) 2-5-3-5
(49) 2-5-4-4
(50) 2-5-5-3
(60) 3-2-5-5
(64) 3-3-4-5
(65) 3-3-5-4
(68) 3-4-3-5
(69) 3-4-4-4
(70) 3-4-5-3
(72) 3-5-2-5
(73) 3-5-3-4
(74) 3-5-4-3
(75) 3-5-5-2
(80) 4-1-5-5
(84) 4-2-4-5
(85) 4-2-5-4
(88) 4-3-3-5
(89) 4-3-4-4
(90) 4-3-5-3
(92) 4-4-2-5
(93) 4-4-3-4
(94) 4-4-4-3
(95) 4-4-5-2
(96) 4-5-1-5
(97) 4-5-2-4
(98) 4-5-3-3
(99) 4-5-4-2
(100) 4-5-5-1
(104) 5-1-4-5
(105) 5-1-5-4
(108) 5-2-3-5
(109) 5-2-4-4
(110) 5-2-5-3

(112) 5-3-2-5
(113) 5-3-3-4
(114) 5-3-4-3
(115) 5-3-5-2
(116) 5-4-1-5
(117) 5-4-2-4
(118) 5-4-3-3
(119) 5-4-4-2
(120) 5-4-5-1
(121) 5-5-1-4
(122) 5-5-2-3
(123) 5-5-3-2
(124) 5-5-4-1

நெடிலடியில் பதினாறெழுத்தடி - 35

(25) 1-5-5-5
(45) 2-4-5-5
(49) 2-5-4-5
(50) 2-5-5-4
(65) 3-3-5-5
(69) 3-4-4-5
(70) 3-4-5-4
(73) 3-5-5-3
(74) 3-5-4-4
(75) 3-5-5-3
(85) 4-2-5-5
(89) 4-3-4-5
(90) 4-3-5-4
(93) 4-4-3-5
(94) 4-4-4-4
(95) 4-4-5-3
(97) 4-5-2-5
(98) 4-5-3-4
(99) 4-5-4-3

(100) 4-5-5-2
(105) 5-1-5-5
(109) 5-2-4-5
(110) 5-2-5-4
(113) 5-3-3-5
(114) 5-3-4-4
(115) 5-3-5-3
(117) 5-4-2-5
(118) 5-4-3-4
(119) 5-4-4-3
(120) 5-4-5-2
(121) 5-5-1-5
(122) 5-5-2-4
(123) 5-5-3-3
(124) 5-5-5-2
(125) 5-5-5-1

நெடிலடியில் பதினேழுசுத்தடி - 20

(50) 2-5-5-5
(70) 3-4-5-5
(74) 3-5-4-5
(75) 3-5-5-4
(90) 4-3-5-5
(94) 4-4-4-5
(95) 4-4-5-4
(98) 4-5-3-5
(99) 4-5-4-4
(100) 4-5-5-3
(110) 5-2-5-5
(114) 5-3-4-5
(115) 5-3-5-4
(118) 5-4-3-5
(119) 5-4-4-4
(120) 5-4-5-3

(122) 5-5-2-5
(123) 5-5-3-4
(124) 5-5-4-3
(125) 5-5-5-2

கழிநெடிலடி பதினெட்டெழுத்தடியும் பத்தொன்பதெழுத்தடியும் இருபதெழுத்தடியுமென மூன்றாம்.

அவற்றுள் பதினெட்டெழுத்தடி - 10

(15) 3-5-5-5
(95) 4-4-5-5
(99) 4-5-4-5
(100) 4-5-5-4
(115) 5-3-5-5
(119) 5-4-4-5
(120) 5-4-5-4
(123) 5-5-3-5
(124) 5-5-4-4
(125) 5-5-5-3

கழிநெடிலடியில் பத்தொன்பதெழுத்தடி - 4

(100) 4-5-5-5
(120) 5-4-5-5
(124) 5-5-4-5
(125) 5-5-5-4

கழிநெடிலடியில் இருபதெழுத்தடி - 1

(125) 5-5-5-5

தொல் – செய்யுளியல் மூலம்

(செய்யப் பெறுவது செய்யுள். பொது நிலையில் இலக்கியத்தைக் குறிக்கும். செய்தது அவ்விலக்கியத்தின் உள் இருக்கும். அதனால் செய் + உள் + இயல் என்று பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும்)

செய்யுள் உறுப்புக்கள்

1. மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ,
யாத்த சீரே அடி யாப்பு எனாஅ,
மரபே தூக்கே தொடைவகை எனாஅ,
நோக்கே பாவே அளவியல் எனாஅத்
திணையே கைகோள் கூற்று வகை எனாஅக்
கேட்போர் களனே காலவகை எனாஅப்
பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ,
முன்னம் பொருளே துறை வகை எனாஅ,
மாட்டே வண்ணமொடு யாப்பியல் வகையின்
ஆறுதலையிட்ட அந்நால் ஐந்தும்
அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயைபே புலனே இழைபு எனாஅப்
பொருந்தக் கூறிய எட்டொடும் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே.

அவற்றுள் மாத்திரையும் எழுத்தியலும்

2. அவற்றுள்
மாத்திரை அளவும் எழுத்தியல் வகையும்
மேற்கிளந்தன்ன என்மனார் புலவர்.

அசைவகை

3. குறிலே, நெடிலே, குறில் இணை, குறில் நெடில்,
ஒற்றோடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரும் நிரையும் என்றிசின் பெயரே.

அவை நேர்பு, நிரைபு எனவும் வருதல்

4. இருவகை உகரமொடு இயைந்தவை வரினே
நேர்பும் நிரைபும் ஆகும் என்ப;
குறில்இணை உகரம் அல்வழியான.

இயலசை, உரியசை

5. இயலசை முதலிரண்டு; ஏனைய உரியசை.

தனிக்குறில் அசை ஆகாத இடம்

6. தனிக்குறில் முதலசை மொழி சிதைந்து ஆகாது.

குற்றியலிகரம் அலகு பெறாமை

7. ஒற்றெழுத்தியற்றே குற்றிய லிகரம்.

முற்றியலுகரமும் அசையாகாத இடம்

8. முற்றியல் உகரமும் மொழிசிதைத்துக் கொளாஅ
நிற்றல் இன்றே ஈற்றடி மருங்கினும்

இருவகை உகரமும் அசையாகும் வகை

9. குற்றிய லுகரமும் முற்றியலு கரமும்
ஒற்றோடு தோன்றி நிற்கவும் பெறுமே.

முடிபு

10. அசையும் சீரும் இசையோடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தலும் வல்லோர் ஆறே.

சீர்

11. ஈரசை கொண்டும் மூவசை புணர்ந்தும்
சீர் இயைந்து இற்றது சீர் எனப் படுமே.

இயற்சீரும் உரிச்சீரும்

12. இயலசை மயக்கம் இயற்சீர்; ஏனை
உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர்.

இதுவும் அது

13. முன் நிரை உறினும் அன்ன வாகும்.

அவற்றுள், இயற்சீர்

14. நேர் அவண் நிற்பின் இயற்சீர் பால.

இதுவும் அது

15. இயலசை ஈற்றுமுன் உரியசை வரினே
நிரையசை இயல வாகும் என்ப.

சீர்வகையில், உயிர்அளபெடையின் நிலை

16. அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே.

ஒற்றளபெடையின் நிலை

17. ஒற்று அளபெடுப்பினும் அற்றென மொழிப.

உரிச்சீர்

18. இயற்சீர் இறுதிமுன் நேர் அவண் நிற்பின்
உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப.

வஞ்சிச்சீர்

19. வஞ்சிச்சீர் என வகை பெற்றனவே
வெண்சீர் அல்லா மூவகை யான.

வஞ்சியுரிச்சீர் வஞ்சிப்பாவுக்காதல்

20. தன் பா அல்வழித் தான் அடைவு இன்றே.

வஞ்சிப்பாவில் ஏனைச்சீர்கள் வருதல்

21. வஞ்சி மருங்கின் எஞ்சிய உரிய.

வெண்பாவிற்கு ஒருங்கு வராத சீர்கள்

22. வெண்பா உரிச்சீர், ஆசிரிய உரிச்சீர்
இன்பா நேரடிக்கு ஒருங்கு நிலை இலவே.

கலிப்பாவில் அவை மயங்குதல்

23. கலித்தளை மருங்கில் கடியவும் படாஅ.

கலிப்பாவில் நேரீற்று இயற்சீர் வராமை

24. கலித்தளை அடிவயின் நேரீற்று இயற்சீர்
நிலைக்குரித்தன்றே தெரியு மோர்க்கே.

அது, வஞ்சிப்பா இறுதியிலும் நில்லாமை

25. வஞ்சி மருங்கினும் இறுதி நில்லா.

ஓர் அசைச்சீர்

26. இசை நிலை நிறைய நிற்குவதாயின்
அசைநிலை வரையார் சீர்நிலை பெறவே.

அது செய்யுளில் பயிலுதல்

27. இயற்சீர் பாற்படுத்து இயற்றினர் கொளலே
தளை வகை சிதையாத் தன்மையான.

வெண்சீர் ஈற்றசையின் ஓர் இயல்பு

28. வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே.

ஆசிரியப்பாவில் வெண்சீர்

29. இன்சீர் இயைய வருவதாயின்
வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே.

ஆசிரியப்பாவில் வஞ்சிச்சீர்

30. அந்நிலை மருங்கின் வஞ்சி உரிச்சீர்
ஒன்றுதல் உடைய ஒரொரு வழியே.

அடியின் அளவு

31. நாற்சீர் கொண்டது அடி எனப்படும்.

அடியின் கண், தளையும் தொடையும்

32. அடியுள்ளனவே தளையோடு தொடையே.

அவை, நாற்சீரடிக்கே உரித்தாதல்

33. அடியிறந்து வருதல் இல்லென மொழிப.

பாட்டென்பதற்கு அடியின் சிறப்பே முதன்மை

34. அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே.

குறளடி

35. நால் எழுத்து ஆதியாகி ஆறெழுத்து
ஏறிய நிலத்தே குறளடி என்ப.

சிந்தடி

36. ஏழ் எழுத்து என்ப சிந்தடிக்கு அளவே,
ஈர் எழுத்து ஏற்றம்அல்வழியான.

அளவடி

37. பத்தெழுத்தென்ப நேரடிக் களவே;
ஒத்த நாலெழுத்து ஒற்றலங்கடையே.

நெடிலடி

38. மூவைந்தெழுத்தே நெடிலடிக்கு அளவே;
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப.

கழிநெடிலடி

39. மூவாறு எழுத்தே கழிநெடிற்கு அளவே ;
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப.

சீர்நிலை

40. சீர்நிலை தானே ஐந்து எழுத்து இறவாது.

வஞ்சிப்பாவில் சீர்நிலை

41. நேர்நிலை வஞ்சிக்கு ஆறும் ஆகும்.

சீரின் இயல்பு

42. எழுத்தளவு எஞ்சிய சீர்நிலை தானே
குன்றலும் மிகுதலும் இல்லென மொழிப.

எண்ணப்படாத எழுத்துக்கள்

43. உயிரில் எழுத்தும் எண்ணப்படாஅ,
உயிர்திறம் இயக்கம் இன்மையான.

வஞ்சியடி

44. வஞ்சியடியே இருசீர்த்தாகும்.

வஞ்சியடிச்சீர்

45. தன்சீர்எழுத்தின் சின்மை மூன்றே.

இதுவும் அது

46. முச்சீரானும் வருமிடன் உடைத்தே.

அசை கூன் ஆதல்

47. அசை கூன் ஆகும் அவ்வயினான.

சீர் கூன்ஆதல்

48. சீர்கூன் ஆதல் நேரடிக்கு உரித்தே.

ஐவகை அடியின் விரி

49. ஐவகை அடியும் விரிக்குங் காலை
மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்
எழுபது வகையின் வழுவில வாகி
அறுநூற்று இருபத்து ஐந்து ஆகும்மே.

இதுவும் இது

50. ஆங்ஙனம் விரிப்பின் அள விறந்தனவே;
பாங்குற உணர்ந்தோர் பன்னுங்காலை.

ஐவகை அடியும் பயில்தல்

51. ஐவகை அடியும் ஆசிரியக்கு உரிய

இதுவும் அது

52. விராஅய் வரினும் ஒருஉநிலை இலவே.

அவற்றில் தளை

53. தன்சீர் வகையினும் தளைநிலை வகையினும்
இன்சீர் வகையின் ஐந்தடிக்கு உரிய.

இதுவும் அது

54. தன்சீர் உள்வழித் தளை வகை வேண்டா.

ஆசிரியத்தளையின் வகை

55. சீர்இயை மருங்கின் ஓரசை ஒப்பின்
ஆசிரியத் தளை என்று அறியல் வேண்டும்.

வஞ்சித்தளைபற்றி ஒரு முடிவு

56. குறளடி முதலா அளவடி காறும்
உறழ்நிலை இலவே வஞ்சிக்கு என்ப

வெண்பா அடியும் தளையும்

57. அளவும் சிந்தும் வெள்ளைக்கு உரிய;
தளை வகை ஒன்றாத் தன்மையான.

கலிப்பாவிற்குரிய அடி

58. அளவடி மிகுதி உளப்படத் தோன்றி
இருநெடில் அடியும் கலியிற்கு உரிய.

அதற்குத் தளை

59. நிரை முதல் வெண்சீர் வந்து நிரைதட்பினும்
வரைநிலையின்றே அவ்வடிக் கென்ப.

இதுவும் அது

60. விராஅய தளையும் ஒருஉநிலை இன்றே.

வெண்பா அடியும், ஆசிரிய அடியும்

61. இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின்
நிலைக்குரி மரபின் நிற்கவும் பெறுமே.

ஐஞ்சீர் அடி

62. வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்
ஐஞ்சீர் அடியும் உளவென மொழிப.

அறுசீர் அடி

63. அறுசீர் அடியே ஆசிரியத் தளையொடு
நெறிபெற்று வருஉம் நேரடி முன்னே.

எழுசீர் அடி

64. எழுசீர் அடியே முடுகியல் நடக்கும்.

முடுகியல்

65. முடுகியல் வரையார் முதல் ஈரடிக்கும்.

இதுவும் அது

66. ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும்
மூவகை அடியும் முன்னுதல் இலவே.

ஆசிரியப்பாவில், அடி பற்றிய முடிபுகள்

67. ஈற்றயல் அடியே ஆசிரிய மருங்கின்
தோற்றம் முச்சீர்த்தாகும் என்ப.

இதுவும் அது

68. இடையும் வரையார் தொடை உணர்வோரே.

கலிப்பாவிற்குச் சிந்தடி

69. முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும்.

வஞ்சிப்பாவின் ஈற்றடி

70. வஞ்சித்தூக்கே செந்தூக்கு இயற்றே.

வெண்பாவின் ஈற்றடி

71. வெண்பாட்டு ஈற்றடி முச்சீர்த்து ஆகும்.

இதுவும் அது

72. அசைச்சீர்த்தாகும் அவ்வயினான.

அதன்கண் நேரசைச்சீர்

73. நேர் ஈற்று இயற்சீர் நிரையும் நிரைபும்
சீர் ஏற்று இறூஉம் இயற்கைய என்ப.

நிரையசைச்சீர்

74. நிரை அவண் நிற்பின் நேரும் நேர்பும்
வரைவின்று என்ப வாய்மொழிப் புலவர்.

கலிப்பாவின் ஈற்றடி

75. எழுசீர் இறுதி ஆசிரியம் கலியே.

இதுவும் அது

76. வெண்பா இயலினும் பண்புற முடியும்.

யாப்பு

77. எழுத்து முதலா ஈண்டிய அடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்.

அதன் ஏழு பகுதிகள்

78. பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே,
அங்கதம், முது சொல்லோடு, அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பேர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்.

மரபு - சொல் மரபு

79. மரபே தானும்
நாற்சொல் இயலான் யாப்பு வழிப்பட்டன்று.

தூக்கு - அகவலோசை

80. அகவலென்பது ஆசிரியம்மே.

வெண்பா

81. அஃது ஆன்று என்ப வெண்பா யாப்பே.

கலி

82. துள்ளல் ஓசை கலியென மொழிப.

வஞ்சி

83. தூங்கல் ஓசை வஞ்சியாகும்.

மருட்பாவிற்குரிய ஓசை முடிபு

84. மருட்பா ஏனை இருசார் அல்லது
தான் இது என்னும் தனிநிலை இன்றே.

இதுவும் அது

85. அவ்வியல் அல்லது பாட்டாங்குக் கிளவார்.

தூக்கின் இயல்பு

86. தூக்கியல் வகையே ஆங்கென மொழிப.

தொடை அதன் வகை

87. மோனை எதுகை முரணே இயைபு என
நால்நெறி மரபின தொடை வகை என்ப.

இதுவும் அது

88. அளபெடை தலைப்பெய ஐந்தும் ஆகும்.

இதுவும் அது

89. பொழிப்பும் ஒருஉம் செந்தொடை மரபும்
அமைத்தனர் தெரியின் அவையுமார் உளவே.

இதுவும் அது

90. நிரனிறுத்து அமைத்தலும், இரட்டையாப்பும்
மொழிந்தவற்றியலான் முற்றும் என்ப.

மோனைத் தொடை

91. அடிதொறும் தலை யெழுத்து ஒப்பது மோனை.

எதுகைத் தொடை

92. அஃதொழிந்து ஒன்றின் எதுகை ஆகும்.

அவற்றிற்குக் கிளைஎழுத்தும் பொருந்தும்

93. ஆயிருதொடைக்கும் கிளை எழுத்தும் உரிய.

முரண் தொடை

94. மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே.

இயையுத் தொடை

95. இறுவாய் ஒன்றல் இயைபின் யாப்பே.

அளபெடைத் தொடை

96. அளபெழின் அவையே அளபெடைத் தொடையே.

பொழிப்புத் தொடை

97. ஒரு சீர் இடையிட்டு எதுகை ஆயின்
பொழிப்பென மொழிதல் புலவர் ஆறே.

ஒரூஉத் தொடை

98. இருசீர் இடை இடின் ஒரூஉ என மொழிப.

செந்தொடை

99. சொல்லிய தொடையோடு வேறுபட்டு இயலின்
சொல்லியல் புலவர் அது செந்தொடை என்ப.

தொடைகளின் விரி

100. மெய்பெறு மரபின் தொடை வகை தாமே
ஐ ஈர் ஆயிரத்து ஆறு ஐஞ் ஞூற்றொடு
தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்று
ஒன்பஃது என்ப உணர்ந்திசினோரே.

புறனடை

101. தெரிந்தனர் விரிப்பின் வரம்பில வாகும்.

இதுவும் அது

102. தொடை வகை நிலையே ஆங்கென மொழிப.

நோக்கு

103. மாத்திரை முதலா. அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப்படுமே.

பா அதன் வகை

104. ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என
நால் இயற்று என்ப பாவகை விரியே.

அதன்கண் உரைக்கப்படும் பொருள்

105. அந்நிலை மருங்கின் அற முதலாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப.

நால்வகை, இருவகையில் அடங்கல்

106. பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்
ஆசிரியப்பா வெண்பா என்றாங்கு
ஆயிரு பாவினுள் அடங்கும் என்ப.

அவை அடங்கும் வகை

107. ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை
வெண்பா நடைத்தே கலி என மொழிப.

வாழ்த்துக்கு நான்கு பாக்களும் உரியன

108. வாழ்த்தியல்வனை நாற்பாவிற்கும் உரித்தே.

புறநிலை வாழ்த்து

109. வழிபடுதெய்வம் நின்புறம் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ.

வாயுறை வாழ்த்து முதலியன

110. வாயுறை வாழ்த்தே, அவையடக் கியலே,
செவியறிவுறூஉ என அவையும் அன்ன.

அவற்றுள் வாயுறை வாழ்த்து

வாயுறை வாழ்த்தே, வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதல் இன்றி வழிநனி பயக்கும் என்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத்தற்றே.

அவையடக்கியல்

அவையடக்கியலே, அரில்தபத் தெரியின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மின் என்று
எல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே.

செவியுறை

113. செவியுறை தானே
பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடன் எனச் செவியுறுத் தன்றே.

பாக்களில் சிலவற்றின் இயல்பு

114. ஒத்தாழிசையும், மண்டில யாப்பும்,
குட்டமும் நேரடிக்கு ஒட்டின என்ப.

இதுவும் அது

115. குட்டம் எருத்தடி உடைத்துமாகும்.

இதுவும் அது

116. மண்டிலம், குட்டம் என்றிசை இரண்டும்
செந்தூக்கு இயல என்மனார் புலவர்.

வெண்பாவின் வகைகள்

117. நெடுவெண் பாட்டே, குறுவெண் பாட்டே,
கைக்கிளை பரிபாட்டு அங்கதச் செய்யுளோடு
ஒத்தவை எல்லாம் வெண்பா யாப்பின.

அவற்றுள் கைக்கிளைப் பாட்டு

118. கைக்கிளை தானே வெண்பாவாகி
ஆசிரிய இயலான் முடியவும் பெறுமே.

பரிபாட்டு

119. பரிபாடல்லே தொகைநிலை வகையின்
இது பா என்னும் இயல்நெறி இன்றிப்
பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப.

பரிபாடலின் உறுப்புக்கள்

120. கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்தொடு
செப்பிய நான்கும் தனக்கு உறுப்பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்.

அதன்கண் பயிலும் அடிகள்

121. சொற்சீர் அடியும், முடுகியல் அடியும்,
அப்பா நிலைமைக்கு உரியவாகும்.

அவற்றுள் சொற்சீரடி

122. கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்தும்,
முட்டு அடி இன்றிக் குறைவு சீர்த்தாகியும்,

ஒழியசை ஆகியும், வழியசை புணர்த்தும்,
சொற்சீர்த்து இறுதல் சொற்சீர்க்கு இயல்பே.

அங்கதப் பாட்டு

123. அங்கதம் தானே அரில்தபத் தெரியின்
செம்பொருள், கரந்தது என இரு வகைத்தே.

செம்பொருள் அங்கதம்

124. செம் பொருளாயின் வசை எனப்படுமே.

பழிகரப்பு அங்கதம்

125. மொழி கரந்து சொல்லின் அது பழிகரப்பாகும்.

செய்யுள் வகை

126. செய்யுள் தாமே இரண்டு என மொழிப.

செவியுறைச் செய்யுள்

127. புகழொடும் பொருளோடும் புணர்ந்தன்றாயின்
செவியுறைச் செய்யுள் அது என மொழிப.

அங்கதச் செய்யுள்

128. வசையொடும் நசையொடும் புணர்ந்தன்றாயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்.

கலிப்பாவின் வகை

129. ஒத்தாழிசைக் கலி, கலிவெண் பாட்டே,
கொச்சகம், உறழொடு கலி நால் வகைத்தே.

ஒத்தாழிசைக்கலி

130. அவற்றுள்
ஒத்தாழிசைக்கலி இருவகைத்தாகும்.

இதுவும் அது

131. இடைநிலைப் பாட்டு, தரவு, போக்கு, அடைஎன
நடைபயின்றொழுகும் ஒன்றென மொழிப.

தரவு

132. தரவே தானும் நாலடி இழிபாய்
ஆறிரண்டு உயர்பு ஏறவும் பெறுமே.

இடைநிலைப் பாட்டு

133. இடைநிலைப் பாட்டே,
தரவு அகப்பட்ட மரபின என்ப.

அடைநிலைக்கிளவி என்ற தனிச்சொல்

134. அடைநிலைக் கிளவி, தாழிசைப் பின்னர்
நடைநவின் றொழுகும் ஆங்கென மொழிப.

போக்கியல் என்னும் சுரிதகம்

135. போக்கியல் வகையே வைப்பு எனப்படுமே.

இதுவும் அது

136. தரவியல் ஒத்தும், அதனகப்படுமே
புரைதீர் இறுதி நிலையுரைத் தன்றே.

இருவகை ஒத்தாழிசைக் கலியுள் மற்றொன்று

137. ஏனை ஒன்றே
தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே.

அம் மற்றொன்றின் வகை

138. அதுவே
வண்ணகம், ஒருபோகு என இரு வகைத்தே.

வண்ணக ஒத்தாழிசை

139. வண்ணகந் தானே,
தரவே, தாழிசை, எண்ணே, வாரம் என்று
அந்நால் வகையின் தோன்றும் என்ப.

அதன் உறுப்புக்களுள் தரவு

140. தரவே தானும்
நான்கும் ஆறும் எட்டும் என்ற
நேரடி பற்றிய நிலைமைத் தாகும்.

தாழிசை

141. ஒத்தது மூன்றாகும் ஒத்தாழிசையே.

இதுவும் அது

142. தரவின் சுருங்கித் தோன்றும் என்ப.

சுரிதகம்

143. அடக்கியல் வாரம் தரவோடு ஒக்கும்.

எண்

144. முதல் தொடை பெருகிச் சுருங்குமன் எண்ணே.

அதற்கு ஒரு முடிபு

145. எண் இடை ஒழிதல் ஏதம் இன்றே
சின்னம் அல்லாக் காலை யான.

ஒருபோகு கலிப்பாவின் வகை

146. ஒருபோகு இயற்கையும் இருவகைத் தாகும்.

அவற்றின் பெயர்

147. கொச்சக ஒருபோகு, அம்போதரங்கம் என்று
ஒப்ப நாடி உணர்தல் வேண்டும்.

கொச்சக ஒருபோகு

148. தரவு இன்றாகித் தாழிசை பெற்றும்,
தாழிசை இன்றித் தரவுடைத் தாகியும்,
எண் இடைஇட்டுச் சின்னாங் குன்றியும்,
அடக்கியல் இன்றி அடிநிமிர்ந்து ஒழுகியும்,
யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையது
கொச்சக ஒருபோகு ஆகும் என்ப.

அதன் அடி வரையறை

149. ஒருபான் சிறுமை இரட்டி அதன் உயர்பே.

அம்போதரங்க ஒருபோகின் அடி வரையறை

150. அம்போதரங்கம் அறுபதிற்றடித்தே;
செம்பால் வாரம் சிறுமைக்கு எல்லை.

அதன் உறுப்புக்கள்

151. எருத்தே, கொச்சகம், அராகம், சிற்றெண்,
அடக்கியல், வாரமொடு அந்நிலைக்கு உரித்தே.

கலிவெண்பா

152. ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலால்
திரிபின்றி வருவது கலிவெண் பாட்டே.

கொச்சகக் கலி

153. தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்தும்,
ஐஞ்சீர் அடுக்கியும் ஆறுமெய் பெற்றும்,
வெண்பா இயலான் வெளிப்படத் தோன்றும்
பாநிலை வகையே கொச்சகக்கலி என
நூல் நவில் புலவர் நுவன்று அறைந்தனரே.

உறழ்கலி

154. கூற்றும் மாற்றமும் இடைஇடை மிடைந்தும்
போக்கின்றாகல் உறழ்கலிக்கு இயல்பே.

அளவியல் ஆசிரியப்பாவின் அடியளவு

155. ஆசிரியப் பாட்டின் அளவிற்கு எல்லை
ஆயிரம் ஆகும்; இழிபு மூன்றடியே.

வெண்பாவின் அடி அளவு

156. நெடுவெண் பாட்டே முந்நால் அடித்தே ;
குறுவெண் பாட்டின் அளவு எழுசீரே.

அங்கதப்பாட்டின் அடியளவு

157. அங்கதப் பாட்டு அவற்றளவோடு ஒக்கும்.

அளவு வரையறை இல்லாதன

158. கலிவெண் பாட்டே, கைக்கிளைச் செய்யுள்,
புறநிலை, வாயுறை, செவியறிவு என்றிவை
தொகுநிலை மரபின் அடியில என்ப.

புறநிலை வாழ்த்து முதலியவற்றிற்கு முடிபு

159. புறநிலை, வாயுறை, செவியறிவுறூஉஎனத்
திறநிலை மூன்றும் திண்ணிதின் தெரியின்
வெண்பா இயலினும் ஆசிரிய இயலினும்
பண்புற முடியும் பாவின என்ப.

பரிபாடலின் அளவு

160. பரிபாட்டெல்லை
நாலீர் ஐம்பது உயர்புஅடியாக
ஐ ஐந்து ஆகும் இழிபு அடிக்கு எல்லை.

இதுவும் அது

161. அளவியல் வகையே அனைவகைப்படுமே.

அடி வரையறை இல்லாதன

162. எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்
அடிவரை இல்லன ஆறுஎன மொழிப.

அவற்றின் வகை

163. அவை தாம்
நூலினான, உரையினான,
நொடியொடு புணர்ந்த பிசியினான,
ஏது நுதலிய முதுமொழியான,
மறைமொழி கிளந்த மந்திரத்தான,
கூற்றிடை வைத்த குறிப்பினான.

அவற்றுள் நூல்

164. அவற்றுள்
நூல் எனப்படுவது நுவலுங்காலை,
முதலும் முடிவும் மாறுகோள் இன்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உள் நின்று அகன்ற உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே.

அதன் வகை

165. அதுவே தானும் ஈர் இரு வகைத்தே

அவற்றின் பெயரும் இயல்பும்

ஒரு பொருள் நுதலிய சூத்திரத் தானும்,
இனமொழி கிளந்த ஒத்தினானும்,
பொதுமொழி கிளந்த படலத்தானும்,
மூன்று உறுப்பு அடக்கிய பிண்டத்தானும் என்று
ஆங்கு அனைமரபின் இயலும் என்ப.

அவற்றுள், சூத்திரம்

167. அவற்றுள்
சூத்திரந் தானே,
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுள் தோன்ற யாத்து அமைப்பதுமே.

ஒத்து

168. நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு
ஒரினப் பொருளை ஒருவழி வைப்பது
ஒத்து என மொழிப உயர்மொழிப் புலவர்.

படலம்

169. ஒரு நெறி இன்றி விரவிய பொருளால்
பொது மொழி தொடரின் அது படலமாகும்.

பிண்டம்

170. மூன்று உறுப்பு அடக்கிய தன்மைத்தாயின்
தோன்று மொழிப் புலவர் அது பிண்டம் என்ப.

உரையின் வகை

171. பாட்டிடை வைத்த குறிப்பினானும்,
பாவின்று எழுந்த கிளவியானும்,
பொருளோடு புணர்ந்த பொய்ம்மொழியானும்,
பொருளோடு புணர்ந்த நகைமொழியானும்,
உரை வகை நடையே நான்கு என மொழிப.

உரை இரண்டு வகை

172. அதுவே தானும் இருவகைத் தாகும்.

அவற்றிள் இயல்பு

173. அவற்றின் இயல்பு
ஒன்றே மற்றும் செவிலிக்கு உரித்தே
ஒன்றே யார்க்கும் வரை நிலை இன்றே

பிசி

174. ஒப்போடு புணர்ந்த உவமத் தானும்
தோன்றுவது கிளந்த துணிவினானும்
என்று இருவகைத்தே பிசிவகை நிலையே.

முதுமொழி

175. நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்
மென்மையும் என்று இவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வருஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப.

மந்திரம்

176. நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப.

குறிப்பு மொழி

177. எழுத்தோடும் சொல்லொடும் புணராதாகிப்
பொருள் புறத்ததுவே குறிப்பு மொழி என்ப.

பண்ணத்தி

178. பாட்டிடைக் கலந்த பொருளவாகிப்
பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே.

இதுவும் அது

179. அதுவே தானும் பிசியொடு மானும்,

அதற்கு அடி அளவு

180. அடிநிமிர் கிளவி ஈராறு ஆகும்.

இதுவும் அது

181. அடி இகந்து வரினும் கடிவரை இன்றே.

அளவியல் முடிபு

182. கிளரிய வகையில் கிளந்தன தெரியின்
அளவியல் வகையே அனை வகைப்படுமே.

திணை

183. கைக்கிளை முதலா எழுபெருந்திணையும்
முற்கிளந்தனவே முறைநெறி வகையின.

கைகோள் களவு

184. காமப் புணர்ச்சியும், இடந்தலைப் படலும்,
பாங்கொடு தழாலும், தோழியிற் புணர்வும் என்று
ஆங்க நால் வகையினும் அடைந்த சார்பொடு
மறையென மொழிதல் மறையோர் ஆறே.

கற்பு

185. மறை வெளிப்படுதலும், தமரின் பெறுதலும்,
இவை முதலாகிய இயல் நெறி திரியாது
மலிவும், புலவியும், ஊடலும், உணர்வும்,
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே.

கைகோள் முடிபு

186. மெய்பெறும் அவையே கைகோள் வகையே.

கூற்று - களவில் கூற்று நிகழ்த்துவோர்

187. பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி,
சீர்த்தகு சிறப்பின் கிழவன், கிழத்தியோடு,
அளவியல் மரபின் அறுவகை யோரும்
களவினில் கிளவிக்கு உரியர் என்ப.

கற்பில் கூற்று நிகழ்த்துவோர்

188. பாணன், கூத்தன், விறலி, பரத்தை,
யாணம் சான்ற அறிவர், கண்டோர்,
பேணுதகு சிறப்பின் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்
தொல்நெறி மரபின் கற்பிற்குரியர்.

இதுவும் அது

189. ஊரும், அயலும், சேரியோரும்
நோய் மருங்கு அறிநரும், தந்தையும், தன்னையும்
கொண்டு எடுத்து மொழியப்படுதல் அல்லது
கூற்று அவண் இன்மை யாப்புறத் தோன்றும்.

நற்றாய் கூற்றின் இயல்பு

190. கிழவன் தன்னொடும் கிழத்தி தன்னொடும்
நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது.

கண்டோர் மொழிதல்

191. ஒண்தொடி மாதர் கிழவன் கிழத்தியொடு
கண்டோர் மொழிதல் கண்டதென்ப.

தலைவன் கூற்றுப்பற்றிய கருத்து

192. இடைச்சுர மருங்கில் கிழவன் கிழத்தியொடு
வழக்கியல் ஆணையின் கிளத்தற்கும் உரியன்.

ஏனையோர் கூற்றுப்பற்றிய கருத்து

193. ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியொடு
மொழிந்தாங்கு உரியர் முன்னத்தின் எடுத்தே.

கேட்போர்

194. மனையோள் கிளவியும், கிழவன் கிளவியும்
நினையுங் காலை கேட்குநர் அவரே.

பார்ப்பார் அறிவர் கூற்றினைக் கேட்போர்

195. பார்ப்பார், அறிவர் என்றிவர் கிளவி
யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே.

தலைவி கேட்பாளாகக் கூறும் கூற்றுக்கள்

196. பரத்தை வாயில் என இரு வீற்றும்
கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப் பயனிலவே

வாயில்கள் கூற்றினைக் கேட்போர்

197. வாயில் உசாவே தம்முளும் உரிய.

மக்கள் அல்லாதோர் கேட்பனவாகக் கூறல்

198. ஞாயிறு, திங்கள், அறிவே, நாணே,
கடலே, கானல், விலங்கே, மரனே,
புலம்புறு பொழுதே, புள்ளே, நெஞ்சே,
அவையல பிறவும் நுதலிய நெறியால்
சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங்கு அமையும் என்மனார் புலவர்.

களன்

199. ஒரு நெறிப்பட்டாங்கு ஒரியல் முடியும்
கரும நிகழ்ச்சி இடம் என மொழிப.

காலம்

200. இறப்பே நிகழ்வே எதிரது என்னும்
திறத்தியல் மருங்கின் தெரிந்தனர் உள்ளப்
பொருள் நிகழ்வு உரைப்பது காலம் ஆகும்.

பயன்

201. இது நனி பயக்கும் இதனான் என்னும்
தொகை நிலைக் கிளவி பயன் எனப்படுமே.

மெய்ப்பாடு

202. உய்த்துணர்வு இன்றித் தலைவரும் பொருளான்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்.

அதன் முடிபு

203. எண்வகை இயல்நெறி பிழையாதாகி
முன்னுறக் கிளந்த முடிவினது அதுவே.

எச்சம்

204. சொல்லொடும் குறிப்பொடும் முடிவு கொள் இயற்கை
புல்லிய கிளவி எச்சம் ஆகும்.

முன்னம்

205. இவ்விடத்து இம்மொழி இவர் இவர்க்கு உரிய என்று
அவ்விடத்து அவரவர்க்கு உரைப்பது முன்னம்.

பொருள்

206. இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
ஒழுக்கமும் என்று இவை இழுக்குநெறி இன்றி
இதுவாகித் திணைக்கு உரிப்பொருள் எனாது
பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்ப.

துறை

207. அவ்வவ மாக்களும் விலங்கும் அன்றிப்
பிற அவண் வரினும் திறவதின் நாடித்
தத்தம் இயலான் மரபொடு முடியின்
அத்திறந்தானே துறை எனப் படுமே.

மாட்டு

208. அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்று பொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்
மாட்டு என மொழிப பாட்டியல் வழக்கின்.

இவற்றில் சிலவற்றிற்கு முடிபு

209. மாட்டும் எச்சமும் நாட்டல் இன்றி
உடனிலை மொழியினும் தொடர்நிலை பெறுமே.

வண்ணம்

210. வண்ணம் தானே நாலைந்து என்ப.

அவற்றின் பெயர்

211. அவைதாம்,
பாஅ வண்ணம், தாஅ வண்ணம்,
வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம்,
இயைபு வண்ணம், அளபெடை வண்ணம்,
நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம்,
சித்திர வண்ணம், நலிபு வண்ணம்,
அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம்,
ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம்,
எண்ணு வண்ணம், அகைப்பு வண்ணம்,
தூங்கல் வண்ணம், ஏந்தல் வண்ணம்,
உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் என்று
ஆங்ஙனம் அறிப அறிந்திவினோரே.

பாஅ வண்ணம்

212. அவற்றுள்
பாஅ வண்ணம்
சொற் சீர்த் தாகி நூற்பால் பயிலும்.

தாஅ வண்ணம்

213. தா அ வண்ணம்
இடையிட்டு வந்த எதுகைத் தாகும்.

வல்லிசை வண்ணம்

214. வல்லிசை வண்ணம் வல்லெழுத்துப் பயிலும்

மெல்லிசை வண்ணம்

215. மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே.

இயைபு வண்ணம்

216. இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே.

அளபெடை வண்ணம்

217. அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்.

நெடுஞ்சீர் வண்ணம்

218. நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்

குறுஞ்சீர் வண்ணம்

219. குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும்.

சித்திர வண்ணம்

220. சித்திர வண்ணம்
நெடியவும் குறியவும் நேர்ந்துடன் வருமே.

நலிபு வண்ணம்

221. நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்

அகப்பாட்டு வண்ணம்

அகப்பாட்டு வண்ணம்

222. முடியாம் தன்மையின் முடிந்ததன் மேற்றே.

புறப்பாட்டு வண்ணம்

223. புறப்பாட்டு வண்ணம்
முடிந்தது போன்று முடியா தாகும்.

ஒழுகு வண்ணம்

224. ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும்.

ஒரூஉ வண்ணம்

225. ஒரூஉ வண்ணம் ஓரீஇத் தொகுக்கும்

எண்ணு வண்ணம்

226. எண்ணுவண்ணம் எண்ணுப் பயிலும்

அகைப்பு வண்ணம்

227. அகைப்பு வண்ணம் அறுத்தறுத்து ஒழுகும்.

தூங்கல் வண்ணம்

228. தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்.

ஏந்தல் வண்ணம்

229. ஏந்தல் வண்ணம்
சொல்லிய சொல்லில் சொல்லியது சிறக்கும்

உருட்டு வண்ணம்

230. உருட்டு வண்ணம் அராகம் தொடுக்கும்.

முடுகு வண்ணம்

231. முடுகு வண்ணம்
அடியிறந்தோடி அதனோரற்றே.

இவற்றின் முடிபு

232. வண்ணம் தாமே இவைஎன மொழிப.

வனப்பு அம்மை

233. வனப்பியல் தானே வகுக்குங் காலைச்
சின் மென் மொழியால் தாய பனுவலொடு
அம்மை தானே அடிநிமிர்பு இன்றே.

அழகு

234. செய்யுள் மொழியால் சீர்புனைந்துயாப்பின்
அவ்வகை தானே அழகெனப்படுமே.

தொன்மை

235. தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே.

தோல்

236. இழுமென்மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந்து ஒழுகினும்
தோல் என மொழிப தொன்மொழிப் புலவர்.

விருந்து

237. விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே.

இயைபு

238. ஞகாரை முதலா னகார ஈற்றுப்
புள்ளி இறுதி இயைபு எனப்படுமே.

புலன்

239. தெரிந்த மொழியால் செவ்விதில் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்
புலன் என மொழிப புலன் உணர்ந்தோரே.

இழைபு

240. ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்து அடக்காது
குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து
ஓங்கிய மொழியான் ஆங்கனம் ஒழுகின்
இழைபின் இலக்கணம் இயைந்ததாகும்.

புறனடை

241. செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி
இழைத்த இலக்கணம் பிழைத்தன போல
வருவ உள எனினும் வந்தவற் றியலான்
திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே.

குறிப்பு : இப்பகுதியில் இடம் பெற்றுள்ள நூற்பாக்கள் முனைவர். ச.வே. சுப்பிரமணியன் அவர்களின் தொல்காப்பியம் தெளிவுரை என்ற நூலிலிருந்து எடுக்கப் பெற்றுள்ளன.

நன்றி : மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

துணைநின்ற நூல்கள் –
அகர நிரலில்

1. இறையனார் களவியல் உரை
2. சிலப்பதிகார உரை (அடியார்க்கு நல்லார்)
3. சிவதருமோத்திரம்
4. தண்டியலங்காரம்
5. திருக்குறள்
6. திருவள்ளுவமாலை
7. தொல்காப்பியம் எழுத்ததிகாரம்
8. தொல்காப்பியம் சொல்லதிகாரம் (சேனாவரையர்)
9. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை
10. தொல்காப்பியம் பொருளதிகாரம் பேராசிரியர் உரை
11. தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க் கினியர் உரை
12. தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தியுரை
13. நம்பியகப் பொருள் விளக்கம்
14. நேமி நாதம்

15. பல்காப்பியம்

16. பன்னிரு பாட்டியல்

17. புறநானூறு

18. புறப்பொருள் வெண்பா மாலை

19. பெருங்கதை

20. மலைபடுகடாம்

21. மாறனலங்காரம்

22. மூதுரை

23. யாப்பருங்கலக் காரிகை

24. யாப்பருங்கல விருத்தியுரை

25. யாழ் நூல்

26. வீர சோழியம்

பின்னிணைப்பு - 1

அடிகளாசிரியரின்
தொல்காப்பியப் பணிகள்

இலக்கணக் கடலாகவும், தொல்காப்பியச் செம்மலாகவும் விளங்கிவரும் அடிகளாசிரியர் அவர்கள் ஆற்றிய தொல்காப்பியப் பணிகள் வருமாறு:

1. தொல்காப்பியம் - எழுத்து - இளம்பூரணர் - 1969
(அடிகளாசிரியரின் சொந்தப்பதிப்பு)

2. ஐவகையடியும் என்னும் தொல்காப்பிய
நூற்பா விளக்கம்
- சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு - 1977

(இவ்ஆய்வுக் கட்டுரை இராசபாளையம் மணிமேகலை மன்றத்தார் வழியாக உயர்திரு. பூ.கு. குப்புசாமிராசா அவர்கள் ஏற்படுத்திய இரு சூத்திர விளக்கப் போட்டிக் கட்டுரையாகும் .)

3. தொல்காப்பியம் - பொருள் - இளம்பூரணர்
- செய்யுளியல் மட்டும் - 1985
(தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு)

4. தொல்காப்பியம் - சொல் - இளம்பூரணர் - 1990
(தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு)

5. தொல்காப்பியம் - பொருள் - எட்டு இயல்கள்
(செய்யுளியல் நீங்கலாக) - இளம்பூரணர் -
-(தமிழ்ப்பல்கலைக்கழகப் பதிப்பு) - 2008

6. தொல்காப்பியச் செய்யுளியல் ஆராய்ச்சி - 2008
(இப்பதிப்பு - சொந்தப்பதிப்பு)

7. தொல்காப்பிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் - (அச்சில்)

.....

குறிப்பு

தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழக அரிய கையெழுத்துச் சுவடித்துறையில், "அடிகளாசிரியரின் தொல்காப்பியப் பதிப்புகள்" என்னும் தலைப்பில் முனைவர் அ. சிவபெருமான் அவர்கள் ஆற்றிய அறக்கட்டளைப் பொழிவு (23.03.2007) அப்பல்கலைக் கழகப் பதிப்புத் துறையினரால் நூலாக்கம் பெற்றுள்ளது.

பின்னிணைப்பு - 2

அடிகளாசிரியரின் வாழ்வும் பணியும்

(அ.சிவபெருமான்)

தமிழ்நாட்டில் விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டத்தின் தென்கோடியில் வடவெள்ளாற்றின் வடக்குக் கரையில் உள்ளது குகையூர் என்னும் கூகையூராகும். இவ்வூரை இலக்கியங்கள் குகையூர் என்று கூறும். பொது மக்கள் கூகையூர் என்று கூறுவர்.

திருமூல நாயனாருடைய கொள்கையில் பயிற்சியுடைய சித்தநாதர் என்னும் சித்தர் ஒருவர் இவ்வூருக்கு வந்து ஆற்றங்கரைப் புதருள்தங்கி, சிவயோக சமாதியை மேற்கொண்டிருந்தார். அவர் அட்டமா சித்தியிலும் வல்லவராய் இருந்தார்.

அவ்வூரை ஆண்டிருந்த குறுநில மன்னனாகிய மாலாங்கன் என்பவன் சித்தநாதருடைய பெருமையை உணர்ந்து தன் மனைவியுடன் வந்து பேரன்புடன் அவர்க்குப் பணிவிடை செய்தொழுகினான். அவ்விருவருடைய பேரன்பினையும் மகப்பேறின்றி மூப்படைந்துள்ள நிலையினையும் உணர்ந்த சித்தநாதர் அவ்விருவரையும் இளமை உடையவராக ஆக்கி, வீரசைவ நெறியை மேற்கொண்டு வாழுமாறு செய்து, பக்குவற்கு உபதேசிக்கும் மாதவக்குருபரனாக மாலாங்கனை ஆக்கினார். அம்மாலாங்கனிலிருந்து அவன் பரம்பரை சித்தநாதேத்சுராதீனமாக ஆயிற்று. அப்பரம்பரையில் பிற்காலத்தில் பட்டத்துப் பெரியசாமி ஐயர் என்பவர் வளர்ந்து வந்தார். அவர் மனைவி. குங்கும அம்மாள் ஆவார். அவ்விருவரும் நன்கு படித்தவர்கள்.

அவ்விருவர்க்கும் கி.பி. 1910 – இல் சாதாரண யாண்டு சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை தனுர் இலக்கினத்தில் பூசம் நாளில் திரு. அடிகளாசிரியர் முதல் மகனாகப் பிறந்தார். இவரின் பிள்ளைப்பெயர் குருசாமிஅய்யர் என்பதாகும். பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கத் தலைவர் தவத்திரு. மறைமலையடிகளார் கருத்துப்படி திரு.அடிகளாசிரியர் எனப் பெயரை மாற்றிக் கொண்டார்.

இளமைக் காலமும் கல்வியும் :

இவர்க்கு ஏழாம் யாண்டில் தந்தையார் காலமாகி விட்டார். இவர் தாயார் குங்கும அம்மாள்தான் இவரைப் பேணிப்புரந்து கல்வி கற்குமாறு செய்தார். பெரம்பலூருக்கும் அண்மையிலுள்ள நெடுவாசல் என்னும் ஊர் இவர் தாயார் பிறந்த ஊராகும் தாய்மாமன் இருவராவர். மூத்தவர் திரு. கு. சுப்பிரமணியதேவர் இளையவர் கு. சிவப்பிரகாசதேவர் ஆவார். இவ்விருவரும் நன்கு தமிழ் பயின்றவர்கள் மருத்துவக்கலை, சோதிடக்கலை ஆகியவற்றிலும் வல்லவர்கள். அடிகளாசிரியர் இவர்கள் [தாய்மாமன்] வீட்டில் தங்கி, தமிழ்ப் பயிற்சியையும் வடமொழிப் பயிற்சியையும் பெற்றார்.

பெரம்பலூரில் வாழ்ந்த திரு.மருதநாடார் என்பவரிடம் சோதிடக் கலையைக் கற்றுக் கொண்டார். முசிறி அரசினர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராய் இருந்த உயர்திரு. வீ. குமாரவீரையர் என்பவரிடம் நன்னூல் காண்டிகை உரையை மட்டும் முறைப்படி பாடங் கேட்டார். 1937 – இல் இவர் தனியாகப் பயின்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் தேர்வெழுதித் தமிழ்ப்புலவர் பட்டத்தைப் பெற்றார்.

மயிலம் கல்லூரியில் பணி

14-07-1938 - இல் மயிலம் திருமடத்தில் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி என்ற பெயரால் ஒரு தமிழ்க்கல்லூரி தோன்றிற்று. அக்கல்லூரியில் இவர் முதலாசிரியராக அமர்ந்தார். அக்கல்லூரி பல்கலைக்கழக ஒப்புதல் பெற்றபின் 1-7-41 இலிருந்து 30-11-41 வரை விரிவுரையாளராகவும் 11-2-42 இலிருந்து 1-7-1950 வரை துணைத் தலைவராகவும் பணியாற்றினார்.

கரந்தைத் தமிழ்க் கல்லூரிப் பணி:

பின்னர் 3-7-1950 இலிருந்து 3-7-1970 வரை தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரியில் விரிவுரையாளராகவும் துணை முதல்வராகவும் பணியாற்றி 4-4-70ல் ஓய்வு பெற்றார்.

ஓய்விற்குப் பின்

சேலம் மாவட்டம் ஆத்தூரில் அமைந்திருந்த தனியார் தமிழ்க்கல்லூரி ஒன்றில் முதல்வராக மூன்றாண்டுகள் பணியாற்றினார்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் ஆராய்ச்சியாளராக ஓராண்டு [1977] பணியாற்றினார்.

20-1-1982ஆம் நாளிலிருந்து 1-10-1985 ஆம் நாள்வரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சுவடிப் புலத்தில் சிறப்பு நிலை இணைப்பேராசிரியராக அமர்ந்து தொல்காப்பிய ஆராய்ச்சியைச் செய்து வந்தார். அதன்பின் மூப்பின் காரணமாகத் தமிழ்ப்பல்கலைக்கழகப் பணியிலிருந்து தாமே விலகிக்கொண்டார். தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து தம்மை விடுவித்துக்

கொண்ட அவர் தம் இல்லத்திலிருந்து அப்பணியை [தொல்காப்பிய ஆய்வுப் பணியை] நிறைவு செய்து வழங்கினார்.

குடும்பம் :

"இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"

என்று தமிழுக்காக வாழ்ந்து வரும் பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள், தாம் பிறந்த ஊரிலேயே, பிறந்த கூரை வீட்டிலேயே மண் தரையில் இன்னமும் அமர்ந்து இந்த மண்ணோடு இருக்கும் பற்றை நிலைப்படுத்துவார் போல் வளங்குன்றிய வாழ்வே வாழ்ந்து வருகிறார். தமிழ்ப் பணிக்காகவே தம் பொருளாதாரத்தைச் செலவிட்டு வேண்டுமென்றே வளங்குன்றிய வாழ்வைத் தேடிக் கொண்டவராவார்.

அறிவுசான்ற மூன்று ஆண்மக்களும், அமைதி சான்ற மூன்று பெண்மக்களும் வாசுகி அனைய மனையாளுமே இவரது சொத்துக்களாக உள்ளனர். சிந்தனை செய்தே சிறந்த இவர் உடல் இன்று பலரின் சிந்தனைக்கு உரியதாக உள்ளது. எழுதி எழுதியே முதிர்ந்த இவரது கைகள் எழுத மறுக்கின்றன. நடந்தே சிறந்த கால்கள் நடை தடுமாறுகின்றன. ஆனால் சிந்தனை மட்டும் தடுமாறாமல் தமிழையே இன்றும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது. அகவை [99] முதிர்ந்த நிலையில் எந்த ஆசையும் அற்று. தம் நூல்கள் அச்சேறி உலாவர வேண்டுமென்ற பற்று ஒன்றுடன் மட்டுமே இவர் வாழ்ந்து வருகிறார்.

அடிகளாசிரியர் தமிழ்ப்பணி

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு

என்ற திருமூலர் வாக்குப்படி அடிகளாசிரியர் இன்றளவும் தமது முதிர்ந்த வயதிலும் [99] தமிழ்ப்பணி செய்து வருகின்றார். ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள் கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கும் பணியை ஆற்றி வந்தார். அன்றியும் இடையறாது உழைத்துத் தமிழில் நூல்கள் எழுதுவதிலும் ஈடுபட்டுள்ளார். இதுகாறும் இவர் உரை நூல்கள் படைப்பிலக்கிய நூல்கள் என்ற வகையில் 57 நூல்களைப் படைத்துள்ளார். அவை வருமாறு:

அடிகளாசிரியர் படைப்புகள்

1. உரை நூல்கள்

அ) உரைப் பதிப்புகள்

(உரையோடு விளங்கிய நூல்களைப் பதிப்பித்தல்)

1. அருணகிரி அந்தாதி – சரசுவதிமகால் வெளியீடு 1967
2. மருதூரந்தாதி உரை– சரசுவதிமகால் வெளியீடு 1968
3. காலச் சக்கரம்– சரசுவதிமகால் வெளியீடு 1969–79 [சோதிட நூல்]
4. வராகர் ஓராசாத்திரம் [சோதிட நூல்] சரசுவதி மகால் வெளியீடு 1970–8–90
5. சிவஞான தீபம் உரை– சரசுவதி மகால் வெளியீடு 1970
6. சிவப்பிரகாச விகாசம் உரை–சரசுவதி மகால் வெளியீடு 1977

ஆ) உரைவரைவுகள்

(தாமே உரை எழுதி வெளியிட்டவை)

7. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் உரை 1938
8. சேக்கிழார் பிள்ளைத் தமிழ் உரை 1967
9. தமிழகக் கல்வெட்டு விளக்கவுரை
[மு. கோவிந்தராசனாருடன்
இணைந்து எழுதியவை] 1967-68
10. திருவலஞ்சுழி தேவாரப்பாடல்கள் உரை 1956
11. திருவாசகக் கோயில் திருப்பதிகம் உரை 1981
12. சிவபுராணச் சிற்றுரை -1986-99-2007
13. சதமணிமாலை மூலமும் உரையும் 1990
14. சித்தாந்த சிகாமணி அங்கத் தலத் திரட்டு உரை 1991
15. ஸ்ரீமத் சிவஞான பாலதேசிகர் திருப்பள்ளி
எழுச்சி உரை 1991
16. குதம்பைச்சித்தர் பாடலும் உரையும் 1999
17. இட்டலிங்க அபிடேக மாலை
மூலமும் உரையும் 2001
18. சசிவன்ன போதம் மூலமும் உரையும் 2002
19. திருமூலரின் முப்பது உபதேசம் 2002
20. பஞ்சதிகார விளக்கம் மூலமும் உரையும் 2003
21. திருமந்திரத்தில் எட்டாந்தந்திரம் 2005
மூலமும் உரையும்

2. பதிப்பு நூல்கள்
(ஓலைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தவை)

22. வீரசைவப் பிரமாணம் 1936
23. சதமணிமாலை [மூலம் மட்டும்] 1938
24. சிவப்பிரகாச விகாசம் [மூலம் மட்டும்] 1939
25. காமநாதர் கோவை 1957
26. மேன்மைப் பதிகம் 1957
27. சதுர்லிங்க தசகோத்திர சதகம் 1958

3. ஆராய்ச்சி நூல்கள்

28. தொல்காப்பியம் - எழுத்து - இளம்பூரணம் 1966
[அறிய ஆராய்ச்சிப் பதிப்பு]

29. ஐவகையடியும் என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம் 1977
[சென்னைப் பல்கலைக்கழகம்]
30. தமிழ் இலக்கண இலக்கியங்களில் சைவசித்தாந்தம் 1978
31. தொல்காப்பியம் – சொல் – இளம்பூரணம் 1990
[தமிழ்ப் பல்கலைக்கழகம்]
32. தொல்காப்பியம் – பொருள் – செய்யுளியல் 1985
[தமிழ்ப் பல்கலைக்கழகம்]
33. தொல்காப்பியம் – பொருள் எட்டு இயல் மட்டும் [தமிழ்ப்பல்கலைக்கழகம்] 2008

4. படைப்பிலக்கிய நூல்கள்

அ) செய்யுள் வடிவம்

34. பிள்ளைப்பாட்டு 1945
35. திருஅரசிலிக் காதை 1948
36. குழந்தை இலக்கியம் 1963
37. சான்றாண்மை [கோப்பெருஞ்சோழன் பற்றியது] 1964–1975
38. சென்னிமலை முருகன் தோத்திரம் 1980
39. அரசியல் இயக்கம் 1981
40. பல்சுவைப் பண்ணத்திப் பாடல்கள் [குழந்தை இலக்கியம்] 1983
41. அருள்திரு மாரியம்மன் திருப்பதிகம் 1982
42. உளத்தூய்மை 1984 – 94
43. தண்ணிழல் [திருமுடிக்காரியைப் பற்றிய அரிய இலக்கியம்] 1990
44. மறவர் நத்தக்குன்றமரும் திருமுருகன் 1993
45. தொழிலியல் 1993
46. மெய்பொருட் காதை [மெய்பொருள் நாயனார் வரலாறு]
47. தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும்

திரு. அடிகளாசிரியன் 163

[தமிழியக்க வெளியீடு] 1996

48. ஒன்பான்கோள் வணக்கப்பாடல்கள்
[தமிழியக்க வெளியீடு] 1993

49. சிறுவர் இலக்கியம் 2003-04

ஆ) உரைநடை

50. எங்களூர் 1939-2004

51. தொடக்கப்பள்ளி – நாடகம் 1949

52. வீரசைவ சிவ பூஜாவிதி 1949

53. விலையேற்றமும் வாழும் வழியும் 1984

54. திருமூலரும் பேருரையும் [தமிழக அரசின்
முதற்பரிசு பெற்ற நூல்] 1998

55. காயத்துள் நின்ற கடவுள் 1999

56. திருவாசக அநுபூதி 2000

57. கீதையின் அறிவுப்பொருள் 2000

58. திருமந்திர உணர்வு 2001

59. தொல்காப்பியச் செய்யுளியல் ஆராய்ச்சி 2008

பொருள் முட்டுப்பாட்டினால் முடங்கிக் கிடக்கும்
அச்சேறா நூல்கள்

1. கலித்தொகை உரை [குறிஞ்சிக் கலி]
2. பிரபுலிங்கலீலை உரை
3. அடிகளாசிரியரின் சமுதாயப் பாடல்கள்
4. அடிகளாசிரியரின் இலக்கணக் கட்டுரைகள்
5. அடிகளாசிரியரின் இலக்கியக் கட்டுரைகள்
6. திருக்குறள் உரை [133 குறள் உரை]
7. முப்பால் – உரைநடை
8. சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகம் மூலமும் உரையும்
9. தொல்காப்பிய ஆராய்ச்சிக் கட்டுரைகள்

பின்னிணைப்பு – 3

அடிகளாசிரியரின் முயற்சியை முற்றுவிப்போம்!

"ஐவகையடியும் விரிக்குங்காலை" என்னும் தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பாவிற்கு அடிகளாசிரியர் எழுதியுள்ள விளக்கம் போற்றற்குரியதாகும். இவ்விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதினேழ் நிலம், எழுபது வகை, அறுநூற்று இருபத்து ஐந்து அடிகள் என்பனவற்றை உணர்ந்து உணர்த்த வேண்டும்.

அடிகளாசிரியரவர்கள் தந்துள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு சீர்கள் அமைந்த பாடல்களை யாத்து வெளிப்படுத்தினால் கற்பாருக்கு எளிதில் விளங்கும். அஃதோடு பலரும் உணர்ந்து பயன் கொள்வர்.

மேற்கூறிய எடுத்துக்காட்டு இலக்கணப் பணி முற்றுப் பெற முடிக்கப்படுமாயின் ஐவகையடியும் விரிகின்ற பதினேழ் நிலமும், எழுபது வகையும், அறுநூற்று இருபத்தைந்து அடியும் மாணாக்கரை அச்சுறுத்தாது அமையும். அத்துடன் அடிகளாசிரியரின் விருப்பமும் நிறைவேறும். யாப்பறிந்த புலவர் பெருமக்கள் உதவ முன்வர வேண்டும்.

[பதிப்பாசிரியர்]